# நாம் நகரத்தார்

சமூக இணையதள மின்னிதழ்

இலவச வெளியீடு

மலர் : 3 இதழ் : 2 ஜனவரி 2024

## பொங்கல் சிறப்பிதழ்



SREE VISALAM CHIT FUND LTD. SVCF ESTD 1947 REGD. TIRUNELVELI




77th Year ANNIVERSARY

# தமிழ்நாட்டின் தலைசிறந்த சீட்டு நிதி நிறுவனம்

## மக்களின் பேராதரவுடன் இன்று 77ஆம் ஆண்டில் அடி எடுத்து வைக்கின்றோம்

**10**
லட்சத்திற்கும் மேலான வாடிக்கையாளர்கள்







**38**
கிளைகள்

## ஸ்ரீ விசாலம் சிட் ஃபண்ட் லிமிடெட்

இன்றைய தினம் நமது நிறுவனத்தின் 77வது ஆண்டு விழா !!!
காலங்கள் கடந்து நமது நிறுவனம் நிலைத்து நின்று, வளர்ச்சியுடன் செழித்து வளர்வதற்கு, தங்களின் அன்பும் உறுதியான ஆதரவும் மற்றும் என்றும் மாறாத நம்பிக்கையுமே காரணமாகும்.

77 ஆண்டுகள் இடைவிடாது இயங்கிவரும் நமது நிறுவனம், நிதிநிலை மற்றும் பொருளாதார ஏற்ற தாழ்வுகள் போன்ற பல்வேறு சவால்களை கடந்து தமிழகத்தின் தலைசிறந்த சீட்டு நிதி நிறுவனமாக நிலைத்து நிற்பதற்கு தங்களின் நம்பிக்கையே அச்சாணியாக உள்ளது.

மேலும், பல இலக்குகளையும் சாதனைகளையும் அடைந்திட உங்கள் மேலான ஆதரவினை கோரி, நன்றியுடனும் நம்பிக்கையுடனும் 77ம் ஆண்டில் அடியெடுத்து வைக்கின்றோம்.

நன்றி! நன்றி! நன்றி!


| பதிவு அலுவலகம் | நிர்வாக அலுவலகம் | மத்திய அலுவலகம் |
| --- | --- | --- |
| திருநெல்வேலி-627 006 | பள்ளத்தூர்-630 107 | 219, அண்ணாசாலை சென்னை-600 002 |
| போன்: 0462 2333474 | போன்: 04565 283477 | போன்: 044 28523386 |

www.sreevisalam.com 86670 03356

# வளவுக்குள்...

அன்பு வாசகர்களுக்கு ,

வணக்கம் .

ஒவ்வொரு விசேஷத்திலும் நம் வீட்டு வளவுக்குள் நமது உறவுகளைச் சந்தித்து மகிழ்வு கொள்வதைப் போல் , ஒவ்வொரு மாதமும் இம்மின்னிதழ் வாயிலாக வாசக உறவுகளாகிய உங்களைச் சந்திப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி !

எதிர் வரவிருக்கும் சில தினங்களில் தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகை வருகிறது. நம்நகரத்தார் சமூகத்தில் சிறப்பானதாகவும், பாரம்பரியத்துடனும் கொண்டாப்படுவது பொங்கல் பண்டிகை. நம் உறவுகளிடையே ஒற்றுமையை வளர்க்கும் பண்டிகை என்றால் அது மிகையாகாது.

ஒவ்வொரு பண்டிகையையும் சிறப்பாக அமைய, அன்றய விருந்து, அப்பண்டிகைக்கு அழகூட்டுக்கிறது. பொங்கல் விழாவுக்கு பொங்கல் மட்டுமல்ல, கரும்புதின்னக் கூலி வேண்டுமோ என்பதற்கிணங்க, பொங்கலன்று கரும்புக்கும், மங்கலத்தின் முதன்மையான மஞ்சளுக்கும், அதீதமான மருத்துவகுணமிகுந்த இஞ்சிக்கும் முதல் மரியாதை உண்டு.

இதனால்தான், பண்டைக்காலம் முதல் இன்றைக்கும் நம் நகரத்தார் பாரம்பரியத்தில் தொடர்ந்து பொங்கலுக்கு கரும்பு, மஞ்சள் கிழங்கு, இஞ்சிக் கொத்து, நிலத்தில் விளைந்த தான்ய வகைகளை பொங்கப் பானை என்று கொடுப்பது வழக்கம், 'பழயன கழிதல்', 'புதியன புகுதல்' என்கிற பழமொழிக்கேற்ப பொங்கலன்று பழய பொருட்களைத் தவிர்த்து, உபயோகப் படுத்தப் படாத புத்தம்புதிய பொருட்களைவைத்தே பொங்கல் தினம் ஆரம்பிக்கிறது. புதுப்பானை, புத்தரிசி, அன்றுகறந்த புதுப்பால், புத்துருக்குப் பசுநெய்யோடு கூடிய புதுப்பொங்கலை, புத்தாடைகூட்டி பொங்கல் விழாவை பொலிவு மிக்கதாக்கி வழிபடுகிறோம்.

இந்த வருடம் பொங்கலுடன் தொடர்ந்து தைப்பூசத் திருநாளும் வருவது சிறப்பு. காவடி சுமந்து கந்தன் அருள் வேண்டி பழநியம்பதி நோக்கி பக்தியுடன் நகரத்தார் பயணிக்கும் நிகழ்வு, இந்த ஆண்டு வழக்கம் போல் சிறப்பாக நடைபெறுகிறது . நம் நகரத்தார்கள் அனைவருடனும் நாமும் இணைந்து அனைத்து மக்களின் நலனுக்குக்காக பிரார்த்தனை செய்வோம்.

பண்டிகை நாட்களை மேலும் சிறப்பாக்கிட தேர்ந்தெடுக்கப்பட்ட பல ஆக்கங்களுடன் அனைவரது வாசிப்பை கவரும் வகையில் இந்த இதழை

வெளியிடுகின்றோம். நகரத்தார்களின் வாசிப்பை வளர்க்கும் விதத்தில் தொடரும் எங்களது முயற்சிக்கு தங்கள் அனைவரது ஆதரவும் அவசியம்.

இதழை தொடர்ந்து வாசிப்பதோடு மற்ற நகரத்தார்களுக்கும் அறிமுகம் செய்யுங்கள் . மேலும் நமது மின்னிதழின் வளர்ச்சியில் பங்களிக்கும் வகையில் மலரில் விளம்பரம் செய்ய விரும்புபவர்கள் மலரின் மின்னஞ்சலிலோ அல்லது வாட்ஸாப் எண்ணிலோ தொடர்பு கொள்ளவும் .

ஒரு பழந்தமிழ்ப் பாடலோடு, இந்த வருடம் மட்டுமல்ல, இனிவரும் பொங்கல் பண்டிகையை,

நண்பர்களோடும், உற்றார், உறவினரோடும் பொங்கல் வாழ்த்துக்களை மகிழ்ச்சியோடு பகிர்ந்து கொள்வோம்.

"செங்கதிரோன் தேரை வடபாற் செலுத்தும்நாள்

பொங்கலெனக் கொண்டாடப் போந்தீர், மங்கலமாய்ப்

பொற்குடத்தை ஏற்றி, புதுப்பால் உலையூற்றி

நற்பொங்கல் காண்பீர் நயந்து."

வாழ்த்துக்களும், இன்சொல்லும், இனிய வாழ்க்கைக்கு வழிவகுக்குமாதலால் வாசகர்களாகிய உங்களுக்கும், உங்களின் குடும்பத்தினருக்கும் புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம் .

நன்மக்கள் உள்ளமெலாம் நல்லொளியால் நிரம்பட்டும்,
நன்னெறியால் நகரத்தார் குலம் நாளும் செழிக்கட்டும்..!



அன்புடன்

இராம.சொக்கலிங்கம்
பதிப்பாசிரியர்



www.maynadiamonds.com
• +91 94426 07043
• +91 94430 42634
GRAND
SALE
SPECIALLLY CRAFTED
MAYNA
DIAMONDS
CUSTOMISED DIAMOND JEWELLERY
www.mayandiamonds.com • 9442607042 • 9443042634
Cassic yet Tendy....



# நாம் நகரத்தார்


சமூக இணையதள மின்னிதழ்

மலர் : 3 இதழ் : 2 ஜனவரி 2024

இலவச வெளியீடு

**பதிப்பாசியர்**

இராம.சொக்கலிங்கம்

நற்சாந்துபட்டி

**இதழாசிரியர்**

உமையாள்

**ஆலோசகர்**

இளமுகில். நாராயணன்

தேவகோட்டை

**இதழ் வடிவமைப்பு**

ப. சுந்தரமகாலிங்கம்

**புத்தக ஆக்கம்**

சேனா டிஜிட்டல்

மின்நூல் வெளியீட்டாளர்கள்

172 – D மேட்டுப்பாளையம் சாலை

நீலகிரி பெர்டிலைசர் காம்பவுண்ட்,

கோயம்புத்தூர் – 641043.



**விளம்பரம் தொடர்புக்கு**

97917 76534

கட்டுரைகள் மற்றும் இதர படைப்புகளுக்கு படைப்பாளர்களே பொறுப்பு. விளம்பரங்கள் விளம்பரதாரரின் பொறுப்பில் வெளியாகின்றன.

## இந்த இதழில்...


**நமது சிந்தனைக்கு**

- மரபுகளில் மாற்றம் ஏற்புடையதா? இல்லையா?
  – கவிஞர் அரிமழம் ப.செல்லப்பா ............. 9

**பக்தித் தொடர்**

- ஏட்டில் இல்லாத மகாபாரதக் கதைகள்
  – புலவர் த. கோவேந்தன், டி.லிட் .............. 21

**கவிச்சோலை**

- புத்தாண்டை வரவேற்போம் – அரு. சிவகாமி இராமனாதன் .............. 26
  பொங்கலோ பொங்கல் – கவிஞர். எம்.சோலை .............................. 48

**மனித வளம்**

- வெற்றிக்கான பயணத்தில் வெற்றியாளரின் மனநிலை
  – இராம. சொக்கலிங்கம், நற்சாந்துப்பட்டி .. 28

**மொழி**

- வாங்க பேசலாம் – பேரா கு. அன்பு மெய்யப்பன் .............................. 36

**வாழ்வியல்**

- பெண் கதவு ஆண் பூட்டு
  – சேவு.முத்துக்குமார் .............................. 43

**பண்பாடு**

- நகரத்தார் திருமணம் – அண. சீனிவாசன் ........................................ 50

**ஆன்மிகம்**

- பக்தி மணம் பரப்பும் வேந்தன்பட்டி நெய் நந்தீஸ்வரர் கோவில்
  – செந்தில் நாகப்பன். .............................. 56

**சிறுகதை**

- கோவில் மாலை – கல்லல். மீ. மணிகண்டன், .................................. 66

**உணவே மருந்து**

- கருணை மிக்க கருணைக்கிழங்கு ................................................ 78

**நிதிமேலாண்மை**

- பணம் சம்பாதிக்கலாம், பங்கு சந்தையில்... – க. ஹர்ஷவர்த்தினி ஸ்ரீ .. 85

**சிறுவர் பக்கம்**

- மழலையர் மழைத்துளிகள் – கல்லல். மீ. மணிகண்டன் ..................... 96

**ஜோதிடம்**

- நீங்கள் எப்படி .. மேஷ லக்கினம் – ஜோதிடர். எல்லி ........................ 98

PM
SWITCH TO THE FUTURE

# PALLATHUR MOTORS LLP







மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் +91 80157 73735

பள்ளத்தூர் மோட்டர்ஸ், எண் 151, வி.ஓ.சி வீதி, காரைக்குடி - 630 001

# மரபுகளில் மாற்றம் ஏற்புடையதா? இல்லையா?

– கவிஞர் அரிமழம் ப.செல்லப்பா.

உலகம் முழுவதும் வாழ்கின்ற மக்கள் பின்பற்றி வரும் பல்வேறு பழக்கங்கள், வழிமுறைகள் அத்தனையும் மரபின் வழியாகத்தொடர்கின்றன.

இந்த மரபை உருவாக்கியவர்கள் யார்? என்பதை அறியாமலேயே பல்லாண்டுகளாக மனிதர்கள் பின்பற்றி வருகிறார்கள். இத்தகைய மரபை முன்னோர்கள்



உருவாக்கினார்கள் என்று சொல்வோர் உண்டு. இல்லையில்லை எங்களது மரபுகள் அனைத்தும் நாகரீகம் தோன்றிய காலத்திலேயே தோன்றியது என்று சொல்வோரும் உண்டு.

மரபை மீறாமல் அப்படியே பின்பற்றுவதான் சிறந்தது என்று பல மனிதர்களும் சொல்கிறார்கள். காலம் மாற மாற, நாகரீகம் மாற மாற மனிதன் 'மரபுகள்' என்ற கட்டுப்பாட்டை தகர்த்துக் கொண்டு வெளியே

வருவதற்குத்தான் விரும்புகிறான். அப்படித் தகர்த்துக்கொண்டு வெளியே வருவோரை,இந்த சமூகம் வரவேற்பதில்லை. மரபுகளை மீறுகிறார்கள் என்று அவர்கள் மீது சமூகம் குற்றம் சாற்றுகிறது.

ஏன் அவர்கள் மரபுகளை மீறினார்கள்? மரபுகளிலே உள்ள சிக்கல் என்ன? மரபுகளை மீறுவதால் மனிதன் பெற்ற நன்மை என்ன? காலமாற்றத்திற்கு தகந்தவாறு மரபுகளில் மாற்றம் ஏற்படுவதிலே என்ன தவறு? ஆதிமனிதன் வாழ்ந்த வாழ்க்கையை இன்று, நாம் பின்பற்றுகிறோமா? அதிலிருந்து எவ்வளவு மாற்றங்களை நாம் ஏற்றுக்கொண்டு இன்றைக்கு வாழ்கிறோம் என்பதை நினைத்துப் பார்த்தோமா?

இவற்றையெல்லாம் சிறிதும் சிந்திக்காமல் மரபுகளிலே மாற்றம் ஏற்படுவதை ஏற்றுக் கொள்ளவே முடியாது என்று மறுப்பவர்களை காலம் ஒன்றே மாற்றக்கூடியது. மரபுகளில் மாற்றத்தை ஏற்றுக்கொள்ளாத பழமை வாதிகள் நம்மோடு வாழும்வரை மரபுகளிலே அவ்வளவு எளிதாக மாற்றங்களை கொண்டு வந்து விடமுடியாது. மனிதனின் உணர்வோடு எப்படி மதமும் ,இனமும்,மொழியும் கலந்துவிட்டதோ அதுபோல மரபுகளும் கலந்து விட்டன.

மாற்றம் ஒன்றே மாறாதது என்பார்கள்.ஆம் அனைத்து தளங்களிலும் காலத்திற்கு ஏற்ப மாற்றங்கள் வரக்கூடும். அப்படி உண்டாகும் மாற்றங்களில் கூட மாற்றங்கள் ஏற்படலாம்.

பொதுவாக மரபுகளில் ஏற்படும் மாற்றங்களால் என்ன பயன் விளைகிறது? என்பதைத்தான் நாம் நோக்க வேண்டும். அவற்றின் பயன்களை நாம் கணக்கிடுகின்ற பொழுது, அந்தப்பயன்களிலுள்ள வன்மை,மென்மை,நன்மை,தீமை ஆகியவை நமக்குப் புலப்படும். மொழிகளில் ஏற்படும் மரபு மாற்றங்கள்,இல்லற வாழ்வில் ஏற்பட்டுள்ள மரபு





மாற்றங்கள்,கலாச்சாரத்தில் ஏற்பட்டுள்ள மரபு மாற்றங்கள்,உணவுப்பழக்கத்தில் ஏற்பட்டுள்ள மரபுவழி மாற்றங்கள், தொழில்களில் உருவாகியுள்ள மாற்றங்கள், பெரியோரை பேணுவதிலே விளைந்துள்ள மாற்றங்கள், சட்டங்களிலும்,ஆட்சி முறைகளிலும்,நிர்வாகத்திலும் ஏற்பட்டுள்ள மாற்றங்களை நாம் நம் வசதி கருதி ஏற்றுக் கொண்டுதானே வாழ்கிறோம். இல்லையில்லை இவைகள் அனைத்தையும் நாம் ஏற்க மறுத்தோமா? இல்லை எதிர்த்தோமா?

மரபுகளிலே ஏற்படும் மாற்றங்களை நம் உள்மனம் ஏற்றுக்கொண்டாலும், சமூகக்கட்டுப்பாடு கருதி, பலருக்கு முன்பாக,மரபுவழி மற்றங்களை ஏற்றுக் கொள்ளாமல்,சமூகத்திற்காக வாய்ச்சொல் வீரர்களாக நம்மைக்காட்டிக் கொண்டு மாற்றத்தை ஏற்க மறுக்கிறோம். இன்னும் எத்தனை காலத்திற்கு நாம் இந்த நிலையில் உறுதியாக நிற்போம் என்பதை யார் அறிவார்?

இன்றைக்கு இல்லற வாழ்க்கையில் மரபுகள் அனைத்தும் பின்பற்றப் படுகிறதா? என்று கேட்டால், மரபுகள் காற்றிலே பறக்க விடப்படுகின்றன என்று பதில்தான் கிடைக்கும்.

சங்ககாலத்தில் இல்லற வாழ்வு எப்படித்திகழ வேண்டும்? என ஒரு பெண் ஒருத்தி பாடுவதாக ஒரு பாடல் உள்ளது. அது இதுதான்: இம்மைமாறி மறுமையாயினும் நீயாகியர் என் கணவனே என்பது சங்ககாலத்தின் இல்லற நிகழ்வு. இந்தப்பிறவியிலே எனக்கு கணவனாக



வாய்த்தவர்,இந்தப்பிறவிபோய் அடுத்த பிறவியிலும் அவரே கணவனாக வாய்க்க வேண்டும் என்கிறாள்.

இதையே கோதை நாச்சியாராகி ஆண்டாள் தன் திருப்பாவையிலும் வலியூறுத்துகிறார். அவரது வரிகள், இம்மைக்கும் ஏழேழ்பிறவிக்கும் உன்தன்னோடு உற்றாமே ஆவோம்என்கிறார். கணவனோடு மனைவி எத்தகைய துன்பம் வந்தாலும் இந்தப்பிறவியில் மட்டுமல்ல பின்வரும் ஏழு பிறவிகளிலும் ஒன்றாகவே வாழ்வோம் என்று தன் விருப்பத்தைச்சொல்வதின் மூலம் இல்லற வாழ்வின் மான்பையும் மரபையும் புரிய வைக்கிறார்கள்.



இன்றைய நிலையில் திருமண வாழ்க்கை எப்படி மாறியுள்ளது? மணமாகி இல்லற வாழ்க்கையை தொடங்க வேண்டிய இருவரும் தங்களுக்குள் ஏற்படும் கருத்து வேறுபாடுகளால் பிரிந்து போக எண்ணுகிறார்களே தவிர,இருவரும் சேர்ந்து பல்லாண்டுகள், பல பிறவிகளிலும் வாழ வேண்டும் என்று நினைப்பதில்லை. தாங்கள் விரும்புகிற வரையில் தான் வாழ்க்கை என்று அவர்களாகவே ஒரு வரம்பை முடிவுசெய்து கொண்டு வாழ்கிறார்கள். தங்களின் விருப்பத்தின் அடிப்படையில் பிரிகிறார்கள்.தங்களின் விருப்பம் ஏற்றுக்கொள்ளப் படவில்லை என்றால்



நீதிமன்றங்கள் மூலமாக விவாகரத்து பெற்றுச் சென்று விடுகிறார்கள். இந்த நிலைதான் இன்றைக்கு பெரும்பாலும் மணம்முடித்த இளம்தம்பதிகளின் மனதிலே பதிந்துவிட்ட ஒன்றாக மாறிவிட்டது.

சரி பழைய மரபுப்படி கூட்டுக் குடும்பங்களாகத் தான் வாழ புதிதாகத் திருமணம் ஆனவர்கள் விரும்புகிறார்களா? என்று கேட்டால், அதற்கு கிடைக்கும் பதில் நம்மை அதிரவைக்கும். திருமணம் ஆனவுடன், இணையர்கள் இருவரும் நம்மோடு யாரும் உடன் வாழக்கூடாது என்று நினைப்பதால். நாம் இருவரும் தனித்து வாழ்வதுதான் சிறப்பு. அதற்கு மிகவும் ஏற்றது தனிக்குடித்தனம் செல்வது தான் என்பார்கள்.

தங்களதுபெற்றோர்களை பேணிக்காக்க வேண்டும் என்னும் மரபைத்தங்களின் சுயநலத்திற்காக மறந்து விடுவார்கள் அந்தப்புது மணத்தம்பதிகள்.

இத்தகைய மனநலப் போக்கு,ஆண்கள் மட்டும் வேலைக்குச்செல்லும் குடும்பங்களில் உள்ளது என்றால்,கணவனும் மனைவியும் வேலைக்குச் செல்லும் குடும்பங்களில் சொல்லவே வேண்டாம். தனித்து வாழ்வதுதான் சிறந்தது என்பதை தாரக மந்திரமாகவே ஏற்றுக் கொண்டு வாழ்கிறவர்கள் அவர்கள்.

இத்தகைய இணையர் களுக்கு குழந்தை பிறந்து விட்டால்,அதை வளர்ப்பதற்கு இவர்களாலே இயலாது. அப்போதுதான் யாரை இவர்கள் வேண்டாம் என்று தவிர்த்தார்களோ, அவர்கள் இருவரின் பெற்றோரை வருந்தி வருந்தி அழைப்பார்கள்.



இவர்களால் வேலைக்கு ஆட்களை அமர்த்தி தங்களின் குழந்தைகளை வளர்க்க முடியும். அப்படிப்பட்ட வளர்ப்புமுறை ஒரு இயந்திரத் தனமிக்கதாகத்தான் இருக்குமே தவிர,அது தாத்தா பாட்டி வளர்க்கும் பாச வளர்ப்பு முறையாக இருக்காது.



எனவே தான் இந்த இணையர்கள் தங்களது பெற்றோரை நாடிச்சென்று, பேரன் பேத்தியை வளர்ப்பது உங்கள் கடமை இல்லையா? பேரன் பேத்தியோடு உங்கள் பொழுதைக்கழிக்க வேண்டாமா?என்றெல்லாம் கேட்பார்கள்.

தங்களை வேண்டாம் என்று ஒதுக்கியவர்கள் ஏன் இப்போது நம்மை நாடி வருகிறார்கள்? என்று பெற்றோர்கள் ஒரு நொடி கூட சிந்திப்பதேயில்லை. காரணம் அவர்களது மனதிலே தோன்றும் பேரன் பேத்தியின் மேல் அவர்கள் வைத்துள்ள பாசப் பிணைப்பேயாகும். பாசத்தோடு நாம் வளர்த்த பிள்ளைகளே நம்மை ஒரு கட்டத்திலே புறக்கணித்தார்களே? என்று கூட அவர்கள் நினைப்பதே யில்லை. கூலிக்கு வேலை செய்யும் ஆயாக்களைப் போல,பாசத்திற்காக வேலை செய்யப்புறப்பட்டு விடுவார்கள் பெற்றோர்கள்.

பேரப்பிள்ளைகளை வளர்ப்பது தாத்தா பாட்டிகளின் கடமை என்று சொல்லும் இணையர்களே, உங்களது பிள்ளைகளை வளர்ப்பது அம்மாக்களின் கடமையல்லவா? என்று அவர்களை நோக்கி நாம் கேட்டால், அதற்கு பதில் எதுவும் அவர்கள் சொல்ல மாட்டார்கள். மௌனம் காப்பார்கள்.

இல்லறம் நடத்துவதிலும், பெற்றோர்களைப் பேணுவதிலும் பழைய மரபுகளை பின்பற்ற சிரிதும் விரும்பாதவர்கள் தான் இந்த இணையர்கள். தங்கள் குழந்தைகள் வளர்ந்தபிறகு,அவர்கள் வளருவதற்கு துணையாக இருந்த பெற்றோர்களை, சற்றும் நினைத்துப் பார்க்காமல் திருப்பி அனுப்பிவிடுவது அல்லது முதியோர் இல்லங்களில் கொண்டு போய் சேர்ப்பது என்பது இன்றைக்கு வெகு இயல்பாக நடைபெறுகிற ஒரு மரபுவழி மாற்றமாகும்.

பெற்றதாயும், பிறந்த பொன்னாடும் நற்றவ வானினும் நனி சிறந்ததுவே!" என்ற வைரவரிக்கு இலக்கணமாகத்திகழ்ந்தது தான் அன்றைய வாழ்க்கை முறையாகும்.



இன்றைய காலக்கட்டத்தில் இதற்கு நேர்மாறாக பெற்றோர்களின் நிலை திகழ்கிறது.வயதான காலத்தில்,நோய்கள் பலவும் உடலில் தங்கிவிட்ட காலத்தில்,மெல்ல மெல்ல அந்த நோய்கள் வயதானோரின் உடலை செயல் இழக்க வைக்கும் நிலையில் பிள்ளைகளால் பேணப்படவேண்டிய பெற்றோர்கள்,ஆதரவு அற்ற அணாதைகளாக சாலைகளிலே நிற்பதும்,முதியோர் இல்லங்களில் அடைக்கலம் தேடுவதுமான அவல்நிலை யாரால் ஏற்பட்டது? மரபுகளை மறந்துவிட்டு, மாற்றுப்பாதையில் பயணிக்கும் இணையர்களால் விளைந்த ஒன்றாகும். இதுபோன்ற மாற்றங்களை யாரும் விரும்புவதும் இல்லை, வரவேற்பதும் இல்லை.

திருமண முறைகளிலும் இன்றைக்கு பல்வேறு



மரபு வழி மாற்றங்கள் ஏற்பட்டு விட்டன. அன்றைக்கு பெரியவர்கள் பலர் கூடி, அமர்ந்து பேசி, இரு வீட்டாரின் சம்மதம் பெற்று, பரிசம் போட்டு திருமணத்தை நடத்தினார்கள். இன்றைக்கு திருமணங்கள் பெரியவர்களால் தீர்மானிக்கப்படுவதில்லை.திருமணங்கள் சொர்க்கத்திலும் அல்லது ரொக்கத்திலும் முடிவு செய்யப்படுவதும் இல்லை. ஆணும் பெண்ணும் தங்களுக்குள் பேசிப்பார்த்து,இன்னும் சொல்லப்போனால் சிலநாட்கள் பழகிப்பார்த்து, ஒருவருக்கு ஒருவர் ஏற்றவர்களா? என்று சிந்தித்து அதன்பின் தங்களின் திருமணத்தை முடிவு செய்கிறார்கள். திருமணங்களை முடிவு செய்வதில் முன்பெல்லாம் வரதட்சணை முதல் இடம் பெற்றிருந்தது. பெண்ணைப்பெற்றவர்கள் வரதட்சணை கொடுக்க சிரமப்பட்டனர். அப்போது பெண்ணைப்பெற்றோர் படும்பாடு,தாளம் படுமோ,தறி படுமோஎன்ற நிலையில்தான் இருந்தது.



ஆனால் இன்று தலைகீழாக மாறிப்போய்,ஆண் மகனைப் பெற்றோர் தங்கள் மகனுக்குத் திருமணம் முடிக்க படும்பாடு, பெரும் பாடாகிவிட்டது. இன்றைக்கு பெண்களின் எதிர்பார்ப்புகள் இமைய மலையை விடப்பெரிதாக உள்ளது.

பெண்களைத் திருமணம் செய்துகொள்ள ஆண்கள் படும் வேதனை வெளியே சொல்ல முடியாது.



திருமண நிகழ்வுகளில் கூட இன்றைக்கு மாற்றங்கள் அதிகம் ஏற்பட்டு விட்டது. அன்றைய திருமணங்களில் திருமணத்தன்று தான் மணமக்கள் ஒருவரை ஒருவர் சந்தித்துக் கொள்வார்கள். இன்றைக்கு திருமணத்திற்கு முதல்நாளே, திருமண வரவேற்புஎன்ற பெயரில் மணமக்களை ஒன்றாக நிற்க வைத்து, திருமணத்தை நடத்துவதைப்போல நடத்தி விடுகிறார்கள். இது குறித்துக்கேட்டால், நேரத்தின் அருமையும், அதிகம் செலவாவதை குறைப்பதும் நோக்கம் என்கிறார்கள். இந்த முறையைப்பின்பற்றுவதிலே ஒரு தவறும் இல்லை என்போரே இன்றைய உலகில் அதிகம் வாழ்கிறார்கள். இதுபோன்ற மரபு மாற்றங்கள் கல்வியில், உணவுப்பழக்கத்தில், நிர்வாக முறைகளில், கலாச்சாரத்தில்,சமூக அமைப்புகளில்,கடவுள் வழிபாட்டில், மத நல்லிணக்கத்தில், தினந்தோறும் நிகழ்ந்து கொண்டே வருகிறது.

எனவே மரபுகளில் ஏற்படும் மாற்றங்களை கணக்கிடும் பொழுதும்,அவற்றின் பலன்கள் குறித்து ஆராய்ந்து பார்க்கும் பொழுதுதான், அவற்றின் நன்மை, தீமை நமக்குப் புலப்படும். மரபுகளில் மாற்றங்கள் ஏற்புடையது



என்றும், இல்லை என்றும் எவராலும் உறுதியாகச் சொல்லமுடியாது. காரணம் மனிதனின் மனநிலை



மாறிக்கொண்டே செல்கிறது. காலத்தின் சூழ்நிலைக்கு ஏற்ப மனிதன் தன்னை மாற்றிக் கொள்ளவே விரும்புகிறான். எதிலும் உறுதியாக மனிதனால் நிற்க முடியாமல் தடுமாறுகிறான்.

நல்லதொரு தலைப்போடு மீண்டும் உங்களை நாம் நகரத்தார் இதழ்வழியாக சந்திக்கிறேன் நண்பர்களே!

அதுவரை இந்தத்தலைப்புக் குறித்து சிந்தியுங்கள்! கட்டுரை குறித்த உங்கள் கருத்துக்களை மறக்காமல் பதிவு செய்யுங்கள்! அது எங்களைச்செம்மைப்படுத்த என்னாளும் உதவும்! என்ன சரிதானே!



கட்டுரை ஆசிரியர்
தொடர்புக்கு: 9791033913,
aamchennai@gmail.com

# நகரத்தார் சங்கம்

## ஈரோடு

ஈரோடு நாட்டுக்கோட்டை நகரத்தார் சங்க
2024-2026 ஆம் ஆண்டிற்கான புதிய நிர்வாகிகள்
(இடமிருந்து வலம்)



M. சோமசுந்தரம்-பொருளாளர்-தேவகோட்டை,
ஹரிஹரன் RM. ராமனாதன்-செயலாளர்-நற்சாந்துப்பட்டி,
A.முருகப்பன்-துணைத்தலைவர்-நற்சாந்துப்பட்டி,
NSS சிவசுப்ரமணியம்- தலைவர்- கண்டவராயன்பட்டி,
ஜுபிட்டர் V.ராமநாதன்-ஆலோசகர்-ராயவரம்,
S.வெங்கடாசலம்-இணைச்செயலாளர்-தேவகோட்டை,
PL.லட்சுமணன்-இணைச்செயலாளர்-தேவகோட்டை.
2024 - 2026 பருவத்திற்கு தெரிவான புதிய நிர்வாகிகள்
பணி சிறந்திட அனைவருக்கும் நாம் நகரத்தார் மின்னிதழ்
வாழ்த்துகளை தெரிவித்து மகிழ்கிறது.

உ

# திருச்சி ஸ்ரீ வளத்தி சிட்பண்ட்ஸ் (பி) லிட்.

VALATHI
Since 2005

## ஸ்ரீ முத்துமீனா சிட்பண்ட்ஸ் (பி)லிட்.

**இன்றைய சேமிப்பே, நாளைய வளர்ச்சியின் அடையாளம்.**

**எங்களிடம் நடைபெறும் சீட்டின் மதிப்பு**

**ரூ.1,00,000/– முதல்**

**ரூ.25,00,000/– வரை**

அதிகபட்ச உச்சவரம்பு 25% முதல் 40% வரை

பதினேழு (17) ஆண்டு கால நம்பிக்கை! நாணயம்! நேர்மையான அணுகு முறை!

**பொதுமக்களிடமிருந்து எந்தவிதமான டெபாசிட்களும் பெறுவதில்லை.**

0431-2760064,80
3580292,7968005.

துவக்கம்
2005

94439 86143

**TRICHY SHREE VALATHI CHIT FUNDS (P) LTD.**

**SRI MUTHUMEENA CHIT FUNDS (P) LTD.,**

C-95, மூர்த்தி ஸ்கொயர், முதல் தளம்,
5வது கி ரா ஸ் தில்லைநகர் மெயின் ரோடு,
MPM ஸ்டோர்ஸ் மாடியில் திருச்சி - 620 018.
Cell : 94439 86143

9/1, (4/1) அருணோதயா அபார்ட்மெண்ட்,
G-1, தரைத்தளம், லோகையா தெரு,
சாலிகிராமம், சென்னை - 600 093.
Cell : 91235 71029,

50, தெற்கு மாரட் வீதி,
(ஸ்டேட்பேங்க் ஏ.டி.எம் மாடியில்)
மதுரை - 625 001. Cell : 93616 07776, 89034 90064

tvcfpl@gmail.com www.valathichitfunds.com

★ சத்தியமேவ ஜெயதே ★

ஏட்டில் இல்லாத மகாபாரதக் கதைகள் – 21

# கண்ணனின் மானம் காத்த பாஞ்சாலியின் பட்டுச்சேலை

– புலவர் த.கோவேந்தன், டி.லிட்



துரியோதனன் சபையில், துரெளபதி மானபங்கப் படுத்தப்பட்டாள். துச்சாதனன் அவள் புடவையை உரியத் தொடங்கினான். பாண்டவர்கள் ஐவரும் செய்வதறியாது கவிழ்ந்த தலையராய்க் கண்ணீர் உகுத்து நின்றனர்.

வீடுமன், துரோணன், கிருபன் முதலிய சான்றோர்களும் வாய் திறக்கவில்லை. கற்புக்கரசி காந்தாரியோ அஞ்சுடன் ஆறு ஆகட்டும்! அதற்கென்ன எழுந்து போடி? என்பதுபோல் மூச்சு விடாமல் மௌனமானாள்.

இந்நிலையில் செயலிழந்த பாஞ்சாலி: கோவிந்தா! கோவிந்தா! என்று புடவை பற்றிய கையைத் தலைமேல் தூக்கிக் கண்ணனைச் சரணம் அடைந்தாள்.

துச்சாதனன் உரிய உரியத் துகில் வளர்ந்தது. ஆயிரம் யானை பலம் கொண்ட

துச்சாதனன் சோர்ந்து ஓய்ந்து கீழே சாய்ந்தான். திரௌபதி மானம் இழக்காமல், மன்னர் சபையில் மாண்புடன் நின்றிருந்தாள்.

பாஞ்சாலி கூப்பிட்டவுடன் கண்ணன் புடவை சுரந்தானே! ஏன்? இப்படி ஒரு வினா எழுந்தது ஒரு நாட்டுப்புறக் கலைஞன் மனத்தில்.

தன் கற்பனையால் அத்ற்கு ஒரு காரணம் கண்டு பிடித்தான். இன்னொருவன் வேறொரு காரணம் கற்பித்தான். அந்த இரண்டையுமே காண்போம்.



ஒருமுறை கண்ணன் கத்தியால் பழம் அறுத்துக் கொண்டிருந்தான். அந்தக் கத்தி, கண்ணன் கையில் பலமாகப் பட்டுவிட்டது. இரத்தம் ஊற்றெடுக்கத் தொடங்கியது. பலர் அங்கே திரண்டிருந்தனர் கண்ணன் காயம் பட்டதற்கு என்ன செய்யலாம் என்று யாருக்கும் தோன்றவில்லை வாயினால, தம் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொணடிருந்தனர்.

பாஞ்சாலி, அவர்களைப் போல் அனுதாபப்படவில்லை இராஜபத்தினியாகிய அவள், புதுப்பட்டுப் புடவை கட்டியிருந்தாள் உடனே அப்புடவையில் ஒரு பகுதியைக் கிழித்துத் தண்ணீரில் நனைத்துக் கண்ணன் கையில் கட்டுப்போட்டாள். கைக்காயம் உடனே ஆறிவிட்டது உடனே எப்படி ஆறும்!

கண்ணன் அங்கிருந்தவர்களின் மனநிலையைச் சோதிக்கத் தானே கையில் காயம் ஏற்படுத்திக் கொண்டான் எல்லோரும் உதவ முன்வராத நிலையில் பாஞ்சாலி தானே பட்டுச்சேலை என்று பாராமல் கிழித்துக் கட்டுக் கட்டினாள்?

பாஞ்சாலி செய்த உதவிக்கு எப்படிக் கைம்மாறு செய்வது என்று நெடுநாளாகக் காத்திருந்தான் கண்ணன். பாஞ்சாலிக்குச் செய்யவேண்டிய நன்றிக்கடன், சாதாரணக் கடனுக்கு வட்டி வளர்வதுபோல் வளர்ந்து கொண்டே இருந்தது.

அந்த நன்றிக் கடன் தீர்க்கும் வாயப்பு, துரியோதனன் சபையில் வாய்த்தது. ஒரு புடவைத்துணுக்குக்காக மலைமலையாகப் புடவைகளைக் குவித்த பின்பே, கணணன் தன் கடன் சுமை தீர்ந்தது என்று நிம்மதி அடைந்தான். இது ஒரு கலைஞனது கற்பனை.

இனி மற்றொருவன் கற்பனையையும் காண்போம். ஒரு முறை கண்ணன் குளத்தில் நீராடிக் கொண்டிருந்தான். அப்போது, அவன் கட்டியிருந்த ஆடையை ஒரு மீன் இழுத்துக் கொண்டு மறைந்துவிட்டது. ஆடையில்லாமல் கண்ணன் கரை ஏறுவது எப்படி? கரை ஏறினாலும் வீடுவரை செல்வது எப்படி? தண்ணீருக்குள் மூழ்கியவாறே தத்தளித்துக் கொண்டிருந்தான். குளிர் உடலை வாட்டுகின்றது பசியோ காதை அடைக்கின்றது அவ்வழியே பலர் சென்று கொண்டுதான் இருந்தனர் யாருக்கும் கணணன் நிலை கண்டு உதவத் தோன்றவில்லை அவர்கள் வழியே போயக் கொண்டிருந்தனர்.

அப்போது, பாஞ்சாலி அவ்வழியே வரநேர்ந்தது கண்ணன் நீரில் தத்தளிப்பதைப் பார்த்தாள் அவன் கரை ஏறாமைக்குரிய காரணத்தையும் உய்த்து உணர்ந்து கொண்டாள். உடனே தான் அணிந்திருநத விலையுயர்ந்த படடுச் சேலையில் ஒரு பகுதியைக் கிழித்துக் கண்ணனிடம் வீசினாள் கண்ணன் அதை உடுத்துக் கொண்டு கரை ஏறினான்.



காலத்தினால் செய்த பாஞ்சாலியின் உதவி ஞாலத்தின் மாணப் பெரிதன்றோ? இந்த நன்றிக் கடன், வட்டிபோல் வளர்ந்து கொண்டே இருந்தது. இக்கடனைத் தீர்ககும் வாய்ப்பை எதிர்நோக்கியிருந்தான் அந்த வாய்ப்பைத் துரியோதனன் உண்டாக்கித் தந்தான், கண்ணன் தன் கடனைத் தீர்க்க அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டான்.

எங்கே வாழ்க்கை தொடங்கும்
அது எங்கே எவ்விதம் முடியும்
இதுதான் பாதை இதுதான் பயணம்
என்பது யாருக்கும் தெரியாது
பாதையெல்லாம் மாறிவரும்
பயணம் முடிந்துவிடும்
மாறுவதைப் புரிந்து கொண்டால்
மயக்கம் தெளிந்துவிடும்
– கவியரசர்



"இன்றைய சேமிப்பு நாளைய முதலீடு"

LIC
भारतीय जीवन बीमा निगम
LIFE INSURANCE CORPORATION OF INDIA



## PL RAMANATHAN (KANDANUR)

**INSURANCE ADVISOR**

LIC of india, Thiruvotriyur Branch

**Mobile : 99 40 132 132**

- ★ To take care of Childresn's Education
- ★ To Create Corpus for Child' marriage
- ★ To Create Corpus for Retirement Expenses
- ★ To save your Taxes at the time of Investment & Maturity

## LIFE INSURANCE CORPORATION OF INDIA

Off Thiruvottriyur Branch "Jeevan Pallava", No. 142, 143 & 144, T.H. Road, Tondiarpet, Chennai-81. Resi:: G-1, Plot No. 15, Door No. 10, Teachers Guild Colony, Villivakkam, Chennai-49.
Tel.: (O) 2345 1530 (M) 99401 32132
E-mail: ourlicplr@gmail.com, licplr@yahoo.com

LIC LIFE INSURANCE CORPORATION OF INDIA

# புத்தாண்டை வரவேற்போம்




அரு. சிவகாமி இராமநாதன்
ஒக்கூர், நவிமும்பை

பாசத்தை பகிர்ந்தளி நல்லுறவுகளோடு
நேசக்கரம் நீட்டு நற்சிந்தனையோடு
மாசுகளற்ற தூய மனத்தோடு–மாற்றான்
வேஷம் விலக்கிடு விவேகத்தோடு

உறங்கவிடாமல் செய்த நினைவுகளோடு
கனவுகள் நனவாக போராடு
தடைகளை உடைத்தெறி தன்முனைப்போடு–புது
சகாப்தம் உருவாகிட விதைபோடு

கள்ளம் கபடமற்ற உள்ளத்தோடு
காட்டாற்று வெள்ளமாய்ப் பாய்ந்தோடு
கவலைகள் களைந்து கரையேறு–பிறர்
கண்ணீர் போக்கும் மனிதனாய் உருமாறு

கடவுளும் உன்னுள் குடிபுகுவான் கனிவோடு
நாளைய நிமிடங்கள் நம்மோடு
நலமாய் வாழும் நம்பிக்கையோடு
புத்தாண்டை வரவேற்போம் பொலிவோடு–வெற்றிப்
பாதையில் வீர நடைபோடு


EIGHT DEGREES
Studios
EIGHT DEGREES
YOUTUBE
PHOTOGRAPBHER
AR RAMANATHAN
FOR MORE INFO
955 11 55 888

# வெற்றிக்கான பயணத்தில்... வெற்றியாளரின் மனநிலை...!

இராம.சொக்கலிங்கம் , நற்சாந்துப்பட்டி




சவால்கள் மற்றும் வாய்ப்புகள் நிறைந்த உலகில், நமது குறிக்கோளில் வெற்றிக்கான பயணத்தில் வெற்றிக்கான நாட்டம் திறமை மற்றும் அதிர்ஷ்டத்தை விட அதிகமாக தேவைப்படுகிறது; வெற்றியாளர்களை மற்றவர்களிடமிருந்து வேறுபடுத்தும் மனநிலையை அது கோருகிறது. வெற்றியாளராக இருப்பது ஒரு குறிப்பிட்ட இலக்கை அடைவது மட்டுமல்ல, மாறாக நெகிழ்ச்சி, உறுதிப்பாடு மற்றும் நேர்மறையான கண்ணோட்டத்துடன் வாழ்க்கையை அணுகுவதற்கான ஒரு வழியாகும். வெற்றிக்கான இந்த பயணத்தில், தனிநபர்கள் வெற்றியாளரின் மனநிலையை வளர்த்துக் கொள்ள அழைக்கப்படுகிறார்கள், இது தடைகளை கடக்கவும், பின்னடைவுகளில் இருந்து கற்றுக்கொள்ளவும், துன்பங்களை எதிர்கொள்வதற்கும் அவர்களுக்கு உதவும் ஒரு சக்தி வாய்ந்த உந்துகோலாகும்.

இந்தக் கட்டுரையில் வெற்றிக்கான பயணத்தில் வெற்றியாளனுக்கு வேண்டிய மனநிலை குறித்துப் பார்ப்போம்.

நேர்மறை சிந்தனையின் சக்தி



வெற்றியைத் தேடும் முயற்சியில், நேர்மறையான சிந்தனையின் மூலம் வெற்றியாளரின் மனநிலையை வளர்ப்பது முதல் படியாகும். வெற்றியாளர்கள் பிரச்சனைகளை விட தீர்வுகளில் கவனம் செலுத்துகிறார்கள், சவால்களை வளர்ச்சிக்கான வாய்ப்புகளாக பார்க்கிறார்கள். ஒரு நேர்மறையான கண்ணோட்டத்தை பராமரிப்பதன் மூலம், தனிநபர்கள் பின்னடைவு மற்றும் உறுதியுடன் தடைகளை வழிநடத்தலாம், இறுதியில் வெற்றிக்கு வழி வகுக்கலாம்.

**தெளிவான இலக்குகளை அமைத்தல்**

தெளிவான, அடையக்கூடிய இலக்குகளை அமைப்பதன் முக்கியத்துவத்தை வெற்றியாளர்கள் புரிந்துகொள்கிறார்கள். இந்த இலக்குகள் ஒரு சாலை வரைபடமாக செயல்படுகின்றன, ஒருவரின் முயற்சிகளுக்கு திசையையும் நோக்கத்தையும் வழங்குகிறது. தனிப்பட்ட அல்லது தொழில்முறைக் கோளங்களில் எதுவாக இருந்தாலும்,

நன்கு வரையறுக்கப்பட்ட பாதை தனிநபர்கள் தங்கள் ஆற்றலை திறம்படச் செலுத்தவும், வழியில் அவர்களின் முன்னேற்றத்தை அளவிடவும் உதவுகிறது.



## தோல்வியை ஒரு படிக்கல் போல் தழுவுதல்

தோல்வி என்பது முடிவல்ல, வெற்றிக்கான பயணத்தில் படிக்கட்டு. வெற்றியாளர்கள் பின்னடைவை மதிப்புமிக்க கற்றல் அனுபவங்களாகக் கருதுகின்றனர், அவர்களின் வளர்ச்சிக்கு பங்களிக்கும் பாடங்களைப் பிரித்தெடுக்கின்றனர். கடந்த காலத் தவறுகளைப் பற்றி சிந்திப்பதற்குப் பதிலாக, புதிய ஞானம் மற்றும் நெகிழ்ச்சியுடன் ஆயுதம் ஏந்திய அவர்கள், தங்களை முன்னோக்கி செலுத்துவதற்கு, தோல்விகளை எரிபொருளாகப் பயன்படுத்துகிறார்கள்.

## தொடர்ச்சியான கற்றல் மற்றும் தழுவல்

ஒரு வெற்றியாளரின் பயணம் தொடர்ச்சியான கற்றல் மற்றும் தகவமைப்புக்கு அர்ப்பணிப்பால் குறிக்கப்படுகிறது. வேகமாக மாறிவரும் உலகில், புதிய அறிவைத் தழுவி, வளரும் சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு செயல்படுபவர்கள் செழிக்க வாய்ப்புகள் அதிகம். வெற்றியாளர்கள் ஆர்வமாக

இருக்கிறார்கள், தங்கள் திறமைகளை விரிவுபடுத்துவதற்கும், அந்தந்த துறைகளில் முன்னேறுவதற்கும் வாய்ப்புகளைத் தேடுகிறார்கள்.

## கடின உழைப்பு மற்றும் அர்ப்பணிப்பு

கடின உழைப்பு மற்றும் அர்ப்பணிப்பு இல்லாமல் வெற்றி அரிதாகவே வரும். வெற்றியாளர்கள் தங்கள் இலக்குகளை அடையத் தேவையான முயற்சியில் ஈடுபடத்



தயாராக உள்ளனர், உண்மையான சாதனை என்பது நிலையான கவனம் மற்றும் விடாமுயற்சியின் விளைவாகும். அர்ப்பணிப்பு மூலம், அவர்கள் ஒரு வலுவான பணி நெறிமுறையை வளர்த்துக் கொள்கிறார்கள், அது வெற்றிக்கான பாதையில் அவர்களைத் தனித்து நிற்கிறது.

## துன்பங்களை எதிர்கொள்வதில் பின்னடைவை உருவாக்குதல்

வாழ்க்கை சவால்களால் நிரம்பியுள்ளது, வெற்றியாளர்கள் பின்னடைவின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்கிறார்கள். பின்னடைவுகளில் இருந்து மீண்டு எழும் திறன் மற்றும் துன்பங்களை வலிமையுடன் எதிர்கொள்ளும் திறன்தான் பின்னடைவு.

பின்னடைவைக் கட்டியெழுப்புவதன் மூலம், தனிநபர்கள் புயல்களைச் சமாளித்து, தடைகளைத் தாண்டி, மறுபுறம் வலுவாக வெளிப்பட்டு, உண்மையான வெற்றியாளர்களாக தங்கள் நிலையை உறுதிப்படுத்திக் கொள்ளலாம்.

### வெற்றி பெறும் அணியை வளர்ப்பது

வெற்றி என்பது பெரும்பாலும் கூட்டு முயற்சியாகும், மேலும் வெற்றியாளர்கள் வெற்றிபெறும் அணியை உருவாக்கி வழிநடத்துவதன் முக்கியத்துவத்தை அங்கீகரிக்கின்றனர். பணியிடத்திலோ அல்லது தனிப்பட்ட முயற்சிகளிலோ, உந்துதல் மற்றும் திறமையான நபர்களுடன் தன்னைச் சுற்றியிருப்பது வெற்றிக்கான வாய்ப்பை அதிகரிக்கிறது. திறமையான ஒத்துழைப்பு ஒரு குழுவின் கூட்டு வலிமையைப் பயன்படுத்துகிறது, எல்லோரும் பிரகாசிக்கக்கூடிய சூழலை உருவாக்குகிறது.




### பெரிய மற்றும் சிறிய சாதனைகளைக் கொண்டாடுதல்

பெரிய மற்றும் சிறிய சாதனைகளை அங்கீகரிப்பதும் கொண்டாடுவதும் வெற்றியாளரின் மனநிலையைப் பேணுவதற்கான ஒரு முக்கிய அம்சமாகும். மைல்கற்களை அடையாளம் காண நேரத்தை எடுத்துக்கொள்வதன் மூலம், தனிநபர்கள் தங்கள்

உந்துதலைத் தூண்டுகிறார்கள் மற்றும் நேர்மறையான நடத்தைகளை வலுப்படுத்துகிறார்கள். கொண்டாட்டங்கள் வெற்றியின் பயணத்திற்கான தொடர்ச்சியான அர்ப்பணிப்பை ஊக்குவிக்கும் முன்னேற்றத்தை நினைவூட்டுகின்றன.

**சமூகத்திற்குத் திரும்பக் கொடுப்பது**



வெற்றியாளர்கள் சமூகத்திற்குத் திருப்பிக் கொடுப்பதன் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்கிறார்கள். தனிப்பட்ட வெற்றிக்கு அப்பால், மற்றவர்கள் மீது நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துவது, நிறைவு மற்றும் நோக்கத்திற்கான உணர்வுக்கு பங்களிக்கிறது. அறிவு, வளங்கள் மற்றும் அனுபவங்களைப் பகிர்வதன் மூலம், வெற்றியாளர்கள் நேர்மறையான மாற்றத்தின் சிற்றலை விளைவை உருவாக்கி, அவர்களின் தனிப்பட்ட சாதனைகளுக்கு அப்பாற்பட்ட ஒரு நீடித்த மரபை விட்டுச் செல்கிறார்கள்.

நிறைவாக வெற்றிக்கான பயணத்தில் வெற்றியாளரின் மனநிலையைத் தழுவுவது என்பது, நேர்மறை சிந்தனை, இலக்கை அமைத்தல், பின்னடைவு மற்றும் தொடர்ச்சியான கற்றல் ஆகியவற்றின் கலவையை




தேவைப்படும் மாற்றும் பயணமாகும். இந்தக் கொள்கைகளை ஏற்று, ஒரு வெற்றியாளரின் பண்புகளை உள்ளடக்கி, தனிநபர்கள் நம்பிக்கையுடனும் நோக்கத்துடனும் வாழ்க்கையின் சவால்களை வழிநடத்த முடியும். வெற்றி என்பது ஒரு இலக்கு மட்டுமல்ல, தனிப்பட்ட வளர்ச்சி, அர்த்தமுள்ள சாதனைகள் மற்றும் உலகில் நேர்மறையான தாக்கம் ஆகியவற்றால் குறிக்கப்பட்ட வாழ்க்கை முறையாகும். நாம் நமது தனித்துவமான பாதையில் செல்லும்போது, வெற்றியாளரை உள்வாங்கிக்கொண்டு, அசைக்க முடியாத உறுதியுடனும் உற்சாகத்துடனும் நமது இலக்குகளுக்கான வெற்றிக்காக பாடுபடுவோம்.

நாம் நகரத்தார் டெலிகிராம் சேனலில் இணைந்து உங்கள் மொபைலிலேயே நமது மின்னிதழை மாதமிரு முறை பெற்றிடுவீர்

t.me/naamnagarathar

Join Telegram

# ஸ்ரீ நித்யகல்யாணி சிட்பண்ட்ஸ் (பி) லிமிடெட்

Sign of Commitment

SRI NITHYAKALYANI CHIT FUNDS (P) LTD.

NKF

## Our culture is financial Discipline

Money is Easier when your
Proactive Plan with Nithyakalyani







**Sri Nithyakalyani Chit Funds(P) Ltd.,**
#22, Lakshmi Road, TVS Nagar,
Madurai - 625 003.
Ph.No : 0452 - 2692680, Mob.No : 9786300304,
E-mail : sncfco@gmail.com

### Branches

| | | | |
|---|---|---|---|
| Madurai Main 98430 93250 | Trichy 98432 91654 | Arasaradi/mdu 73391 25777 | Thirunagar/mdu 84899 10191 |
| Dindigal 98432 91652 | Coimbatore 82200 52338 | Erode 75581 99888 | Srivilliputhur 70944 61192 |
| Anna Nagar/mdu 98432 91653 | Reserveline/mdu 98430 93256 | Aruppukkottai 73589 91777 | Dindigul (Regl.) 75581 99777 |

# வாங்க பேசலாம் ..!

## (செட்டிநாட்டு வட்டாரச் சொற்கள்)



-பேரா.கு.அன்புமெய்யப்பன்
இராமசாமி தமிழ்க் கல்லூரி
காரைக்குடி

பகுதி - 2

**நாட்டுக்கோட்டை நகரத்தார் சமூகத்தால் மட்டும் தனித்துவமாகப் பேசப்பட்ட, பேசப்படுகின்ற சொற்களைத் தற்காலத் தலைமுறையினருக்குக் கொண்டு சேர்ப்பதே இத்தொடரின் நோக்கம்...வாங்க பேசலாம்..!**

கவியரசு கண்ணதாசன் அர்த்தமுள்ள இந்து மதத்தில் ஒரு செய்தியைக் குறிப்பிடுவார். காட்டுமிராண்டிகளாகச் சிதறிக் கிடந்த மனிதர்கள் குடிபெயர்ந்து ஊர்ந்து ஓரிடத்தில் சேர்ந்தார்கள். அதனால் அவர்கள் சேர்ந்து வாழ்ந்த இடம் ஊர் என்று அழைக்கப்பட்டது.

அதில் பலர் நகர்ந்து வந்து பெருங்கூட்டமாக ஓரிடத்தில் குடியேறினார்கள். அவ்விடம் நகரம் என அழைக்கப்பட்டது. என்பார்.

அவ்வாறு பல நகரங்களை உருவாக்கியதால் நாம் நகரத்தார் என அழைக்கப்படுகிறோம்.

ஆன்மீகத்தையும் தமிழையும் தம் இரு கண்களாகப் போற்றி வந்தவர்கள் நம் ஐயாக்கள். பாரம்பரியமும் பழம் பெருமையும் கொண்ட நம் முன்னோர்கள் பல தூய தமிழ்ச் சொற்களைத் தமது வாழ்விலேயே பயன்படுத்தி வந்துள்ளனர்.

அவற்றில் ஒன்று அம்மான்.

# அம்மான்

காதல் வாழ்வுக்கு இலக்கணம் கூறிய உலகத்தின் ஒரே மொழி தமிழ். நம்தமிழ் மொழியில் கிடைத்த முதல் இலக்கணமான தொல்காப்பியத்தில் கற்பியல் என்னும் ஒரு வாழ்வியல் இலக்கணம் கூறும் பகுதி ஒன்றுண்டு. அதன் முதல் பாடல், கற்பெனப் படுவது கரணமொடு புணர என்று தொடங்குகிறது. இங்கு கற்பெனப்படுவது திருமணத்திற்குப் பின்பான வாழ்வைக் குறிக்கும் சொல். அத் திருமணம் சடங்குகளால்(கரணம்) செய்யப்படுகிறது என்கிறார் தொல்காப்பியர்.

கரணம் என்பதற்கு இளம்பூரணர் உரை எழுதுகையில், தந்தை, தாய், மாதுலனும் இவரில்லாத வழி சான்றோரும் இருந்து சடங்குகளைச் செய்வது என விளக்கம் தருகிறார். இங்கு மாதுலன் என்படுபவன் மாமன் ஆவான். இப்படித் தொல்காப்பியர் காலத்திலேயே மாமனுக்கான உரிமையும் மரியாதையும் இருந்திருக்கிறது என்பதை இவ்வரிகளால் அறிய முடிகிறது.



தந்தைக்கு அடுத்த மிக முக்கியமான உறவு இது. அனைத்து சமுதாயத்தைச் சார்ந்தவர்களும் மிக முக்கியத்துவம் கொடுக்கும் ஒர் உறவு. இன்று இச்சொல்லை அதிகம் பயன்படுத்துவதில்லை. மாறாக மாமா என்ற சொல்லையே அதிகம் பயன்படுத்தி வருகிறோம். அம்மான் என்ற சொல்லுக்கு தாயுடன் பிறந்தவன் என்பது பொருள்.

புறநானூற்றின் ஒரு பாடலைப் பாடியவர் இருப்பிடர்த்தலையார் என்பவர். இவர் சோழன் கரிகாலனின் தாய்மாமனாவார். இவரைப் பற்றி உரையாசிரியர்கள் குறிப்பிடும் போது, இரும்பிடர்த் தலையார் என்னும் தம் அம்மானை என்று குறிப்பிடுகின்றனர். கரிகாலனின் தாய் மாமனே இவ்விரும்பிடர்தலையார் எனச் சுட்டுகின்றனர்.

அப்படிப்பட்ட மிகப் பழைமையான சொல் அம்மான் என்பது. அச்சொல் நம் சமூகத்தில் பயன்பட்டு வருவது நமக்குப் பெருமையே. அத்தை கணவனையும், மாமனாரையும் அம்மான் என்றே அழைப்பது நம் வழக்கம். அம்மான் என்னும் சொல்லே மாமன் என மருவி, இன்று மாமா என்று சுருங்கி வழங்கப்பட்டு வருகிறது,

## மாம வேவு

பெண் பிள்ளைகள் என்றாலே தாய்க்கும் தாய் வீட்டார்க்கும் ஓவியம்தான். பழைய சொலவடை ஒன்றுண்டு, பெண் இன்றிப் பெருமையும் இல்லை, கண் இன்றிக் காட்சியும் இல்லை. அதை நிருபிக்கும் வகையிலாகவே மணமகன் வீட்டாரிடம் மகளுக்குப் பெருமை தேடித் தரும் வகையில் பொருள் கொடுத்து அனுப்பும் வழக்கம் உருவாகியிருக்கக் கூடும்.



அதன் பொருட்டுப் பெண் பிள்ளைகளை புகுந்த வீட்டிற்கு அனுப்பும் போது, பெரும் பொருள் கொடுத்து அனுப்புவது நம் வழக்கம். தாய் மாமன் மட்டும் அதற்கு விதி விலக்கா என்ன? அவர்கள் திருமணத்திற்கு முதல் நாள் அனைத்து உணவுப் பொருட்களையும் தலைச் சுமையாகவே தாய் மாமன் மாப்பிள்ளை வீட்டிற்குக் கொண்டு வந்து கொடுத்த பொருள்களே மாம வேவு என அழைக்கப்படுகிறது. கண்ணதாசன் தாய் மாமன் சீர் பற்றி ஒரு பாடலில்,

தங்கக் கடிகாரம் வைர மணியாரம்

தந்து மணம் பேசுவார்

மாமன் தங்கை மகளான

மங்கை உனக்காக உலகை விலை பேசுவார்

என்று தங்கை மகளுக்கு பொருள் கொடுப்பதில் மாமனது தாராள மனத்தைப் படம் பிடித்துக் காட்டுவார்.

வேவு என்ற சொல் மருவிய சொல். சரியான சொல் வேள்வு என்பது. சீவக சிந்தாமணியில் இச் சொல் காணப்படுகிறது. விழவும் வேள்வும் விடுத்தலொன்றின்மையால் என்ற வரியில் வேள்வு என்பது மணமக்கள் வீட்டார் கொண்டு வரும் பண்டங்கள் எனக் குறிப்பிடப்படுகிறது. அச் சொல்லே இன்று வேவு என வழங்கி வருகிறது. நம் நகரத்தார்களிடம் இன்று வரை இச் சொல்லும் இப்பழக்கமும் கடைபிடிக்கப்பட்டு வருவது சிறப்புக்குரியது.

பங்காளி! தங்கச்சி மகளுக்கு சித்தரை 12 கலியாணம், ஞாயிற்றுக் கிழமைதான், வேன் ஏற்பாடு பண்ணியிருக்கு, அவசியம் வந்துறனும் என்ற வார்த்தைகள் காதுகளில் இன்று வரை விழுந்துகொண்டிருப்பது நம் ஐயாக்கள் செய்த புண்ணியமே.

ஒரு காலத்தில், தனித்தனி ஓலைப் பெட்டிகளில், திருமண விருந்துக்குத் தேவையான அரிசி, பரங்கிக்காய், தேங்காய், கத்தரிக்காய், வேறு பல காய்கள், இலைக்கட்டு போன்றவற்றை வைத்துத் தலைச் சுமையாக மாமனும், தாய் வீட்டாரும் மணமகள் வீட்டிற்குக் கொண்டு வந்து கொடுப்பது தொன்று தொட்ட நம் நகரத்தார்களின் வழக்கமாகக் கூறப்படுகிறது.



1954-இல் வெளியிடப்பட்ட தெற்கு வட்டகை நகரத்தார் செய்த தீர்மானங்கள் என்னும் பெயரில் சிறு நூல் வெளியிடப்பட்டுள்ளது. அச்சிறு நூலில் நம் நகரத்தார்களின் அனைத்து நிகழ்வுகளிலும் நகரத்தார் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகளைத் தெளிவாகவும், தீர்க்கமாகவும் விளக்கியுள்ளனர். அதில் மாமவேவு குறித்த பகுதியில், மாம வேவு எடுக்கிறதற்கு அரிசி சாமான் வேஷ்டி, சேலை முதலிய எல்லாச் சாமான்களும் சேர்த்து ரூ. 41-க்குள் கொடுக்கிறது. வேறு எதுவும் கொடுப்பதில்லை. மாமக்காரருக்கு பாக்கு படி (ஒரு படி பாக்கு) 1 அல்லது அதற்காக ரூ.5க்குள் கொடுக்கிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.



தற்காலங்களில் இது போன்று செய்வது கிடையாது. இன்றைய சூழலுக்கு ஏற்ற வகையில், குறியீடாக, வெள்ளிக் கடகத்தில், அரிசி நிரப்பி வெள்ளிக் கத்திரிக்காய், தேங்காய் வைத்து, அதனைத் தாய் வீட்டுப் பங்காளிகள் தலைப்பாகை கட்டி, தலையில் வைத்து சிலேட்டு (கண்ணாடிச் சில்லுகளால் ஆன

விளக்கு சில்லேட்டு விளக்கு) விளக்கினை நடுவில் வைத்து பெண் வீட்டார் அதனை இறக்கிக் கொள்கிறார்கள்.

பொருளுக்காகத் தாய் வீட்டார் ஒரு தொகையும் கொடுப்பர். பதில் மரியாதை தாய் வீட்டாருக்கு மகள் வீட்டாரால் செய்யப்படுகிறது. அன்று நம் ஐயாக்கள் தொடங்கிய சடங்குகள் இன்று வரை நம் சமூகத்தாரால் தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டு வருவது நாம் நினைத்து நினைத்துப் பெருமைப்பட வேண்டிய ஒன்று. ஆயினும், அச்சடங்குகள் ஏற்படுத்தப்பட்டதன் நோக்கம் மறைந்து தங்கள் வளமையை வெளிப்படுத்தும் பாங்கு வளர்ந்து வருவது சிந்திக்க வேண்டிய ஒன்று.

– தொடர்ந்து பேசுவோம்

# வேண்டும்...



மனதிலுறுதி வேண்டும்,
வாக்கினி லேயினிமை வேண்டும்;
நினைவு நல்லது வேண்டும்,
நெருங்கின பொருள் கைப்பட வேண்டும்;
கனவு மெய்ப்பட வேண்டும்,
கைவசமாவது விரைவில் வேண்டும்;
தனமும் இன்பமும் வேண்டும்,
தரணியிலே பெருமை வேண்டும்.

கண் திறந்திட வேண்டும்,
காரியத்தி லுறுதி வேண்டும்;
பெண் விடுதலை வேண்டும்,
பெரிய கடவுள் காக்க வேண்டும்,
மண் பயனுற வேண்டும்,
வானகமிங்கு தென்பட வேண்டும்;
உண்மை நின்றிட வேண்டும்.

– பாரதியார்

# S BAGS

## காரைக்குடி

## திருமண தாம்பூலம் BAGS























**5400 Happy Customers**

**CONTACT :829 829 6601**

**www.sbagsandgifts.com**

பெண் கதவு, ஆண் பூட்டு - 2

# நிறை காண்பாய் நெஞ்சே

- சேவு.முத்துக்குமார், காரைக்குடி

**தன் மனைவியை மகிழ்வாக வைத்திருக்கும் ஆணே கணவன் என்ற உறவுக்குத் தகுதியானவன்**

ஒருவகுப்பில் ஆசிரியை இரண்டாம் வாய்ப்பாடு எழுதிப் போடும்போது மாணவர்கள், ஓங்கிக் கத்தினார்களாம்.



1X2=2

2X2=4

3X2=5

4X2=8

5X2=10

என ஆசிரியர் எழுதிப்போட, 3X2=5 கிடையாது டீச்சர், 6 என வகுப்பறையே அலறியது. தவறு மட்டுமே உங்கள் கண்களுக்குப்படுகிறது. சரியாக இருக்கும் நான்கு விடைகளை நீங்கள் கண்டு கொள்ளவில்லை என்றார் ஆசிரியை, இல்லற வாழ்க்கையும், அவ்வாறே, செய்யக்கூடிய சின்னச் சின்ன தவறுகளைக்கூட பூதாகரமாக்கி சண்டை நடைபெறும் களமாக மாறுகிறது... எதைச் செய்தாலும், எதைத் தொட்டாலும் குறைகளைச் சுட்டிக் காட்டிக்

கொண்டிருந்தால் மனம் சலிப்படையும். கணவனுக்கும் மனைவிக்கும் இடையேயான அன்பில் ஓட்டை விழும்.

நான் என்ன செய்தாலும் அவள் ஏதாவது ஒரு குறையைக் கண்டு பிடிச்சு என்னைத் திட்டிக்கொண்டேயிருப்பாடா. போர்வையை மடிங்க, பாயைச் சுத்துங்க, லைட்டு ஏன் பகல்ல எரியுது, அமத்துங்க, பேன் ஏன் சும்மா ஓடுது, துணிகளைக் கண்ட இடத்துல போடாதீங்க. இதில் ஒவ்வொன்றையும் நான் சரிசெய்தாலும் மீண்டும் மீண்டும் வேறு ஏதாவது சொல்லி வெறுப்படிப்பாடா... இது ஒரு கணவனின் புலம்பல்.

நான் என்ன செய்தாலும் குறை சொல்லிக்கிட்டே இருக்காருப்பா... சாம்பார்ல உப்பில்ல, உப்ப சரியாப்போட்டா உரப்பு இல்ல.. புளிப்பு இல்ல.. காஃபியில சர்க்கர கம்மியா இருக்கு, ஏன் துணிய அயர்ன் பண்ணல, அதச் செய்யமாட்டேங்கிற... இதப் பண்ண மாட்டேங்கிற.. நிம்மதியே போயிடுது... இவர என்னாலே திருப்தி படுத்தவே முடியல. பேசாம இவர விட்டுட்டு வந்துடலாமோன்னு தோணுது... இது ஒரு மனைவியின் புலம்பல்.



பசியோடு வந்த கணவனுக்குத் தட்டை எடுத்து வைத்துப் பரிமாறினாள் கலா.. அவித்த முட்டை அவனுக்குப் பிடிக்குமென்று தட்டில் எடுத்து வைத்தாள். ஏன், முட்டையை அவிச்ச.. ஆம்லெட் போட்டிருக்கலாமில்ல எனச்

சொன்னான் அவன். மறுநாள் ஆம்லெட் போட்டுத் தட்டில் வைத்தாள் கலா.

ஏன் ஆம்லெட் போட்ட,அவிச்சு வச்சுருக்கலாம்ல, எனச் சொன்னான் அவள், சண்டை போட விரும்பாதவளாய், அடுத்த நாள், ஆம்லெட் ஒன்று, அவிச்ச முட்டை ஒன்று என வைக்க, கணவன் கோபமாகச் சொன்னானாம்.

ஏன் அவிக்க வேண்டிய முட்டையை ஆம்லெட் போட்டிருக்க, ஆம்லெட் போட வேண்டிய முட்டைய அவிச்சு வச்சிருக்க....

அவள் பொறுமையின் பிறப்பிடம், அமைதியாகவே கேட்டுக்கொண்டாள், சிலர் பொங்குமாக் கடல், கோபத்தில் இரண்டையும் அவன் முகத்தில் வீசியிருப்பார்கள். பல குடும்பங்களில் சண்டை என்பது இப்படித்தான், காரண காரியமில்லாமல் வருகிறது. அமைதியாகக் கடந்து செல்வது இறைநிலை, அத்தகைய இறைநிலையை நாம் அடைய வேண்டும்.

நம் நிறைகளைப் பாராட்ட வேண்டாம், குறை சொல்லாமலாவது இருக்கலாம். குறை சொல்பவர்கள் சொல்லிக் கொண்டே இருப்பார்கள். அது அவர்களுக்குக் குடிசைத் தொழில் அத்தகையோரைக் கடந்து செல்வதே உத்தமம். கணவனோ, மனைவியோ.. பதிலுக்குப் பதில் உரைத்தால் பிரச்சனை பூகம்பமாக வெடிக்கும். இல்லறம் இனிமை இல்லாமல் போகும். நமக்குக் கிடைத்த வாழ்க்கை இதுதான் என மனதை ஆறுதல்படுத்திக் கொள்ள வேண்டும். இல்லையெனில் நம்மை நம்பி உள்ள குழந்தைகள் பெரிதும் பாதிக்கப்படுவர். வேலை காரணமாக வெளியூர் சென்றிருந்த கணவன் வீட்டுக்குள் நுழைய, கையில் அவனுக்குப் பிடித்த அல்வாவை வைத்துக் கொண்டு வரவேற்றாள் மனைவி. செய்து ஒருமாதமாயிற்று, இருப்பினும் கணவனுக்குப் பிடிக்குமே என்று எடுத்து

வைத்திருந்து, ஆவலோடு காத்திருந்தாள் அவள்.மனைவியின் அன்பு கண்டு மகிழ்வோடு எடுத்து அல்வாத்துண்டை உள்ளே போட அல்வா பசை போல வாயில் ஒட்டிக்கொண்டது, அவன் கண்களில் இருந்து கண்ணீர்வர, ஆனந்தக் கண்ணீர் என மனைவி நினைத்து, ஏங்க இன்னும் கொஞ்சம் அல்வா தரவா எனக் கேட்டாள்.

மிகவும் முயன்று அல்வாவை நாக்கால் ஒதுக்கிய கணவன், டியர் ... உன் அல்வாவைச் சாப்பிட நான் போன மாதம் வந்திருக்கணும், நான் லேட்டா வந்தது என் தப்பு, அல்வாவில் ஒன்றும் குறையில்லை என வாயை ஒரு மாதிரி வைத்துக் கொண்டு கூற, மனைவி நிலைமை அறிந்து சிரித்தாலும், சாரிங்க.... ஆர்வக்கோளாறுல எப்படி இருக்குதுன்னு பார்க்கலங்க என்றாள். இல்லம் மகிழ்ச்சியால் நிறைந்தது. ஆனந்தம் பரவியது.

அதே வேளையில் இன்னொரு வீட்டில் இதே நிகழ்வு நடக்க..

என்னடி அல்வாவா பண்ணிருக்க.. நாய் கூடத் தின்னாது, பெரிசாத் தட்டத்தூக்கிட்டு வந்துட்ட, பல்லுப் போச்சு போ... கொண்டு போயி கழுதைக்குப் போடு. கழுத! கழுத!



மகிழ்ச்சியாக வந்த கணவனின் உற்சாகம் கெட்டது. ஆவலோடு எதிர்பார்த்த மனைவியின் அன்பு கெட்டது. இல்லறம் அங்கே துன்பத்தால் சூழ்ந்தது.

இன்றைய காலத்துப் பெண்களில் பலர்

சமையலறை என்றால் என்ன? அது எப்படி இருக்கும் எனக் கேட்கிறார்கள். சமைக்கத் தெரியுமா? எனக் கேட்க நன்றாக சுடுதண்ணீர் வைப்பேன் எனப் பெருமையாகச் சொல்கிறார்கள், தோசை சுடுவது என்பது எளிது... அதைக்கூட ஒழுங்காகச் சுடத் தெரியாமல் , தோசைக்கல்லோடு பெயர்த்து எடுக்கும் மகாராணிகளும் உள்ளார்கள்.

பசியோடு வந்த சேகருக்கு மனைவி கமலா தோசை வார்த்துத் தர, தட்டில் அதன் இருப்பைப் பார்த்தான் அவன். நாய் குதறியது போல இருந்தது, தோசை ஆஹா.. அருமை.. பிரமாதம் எங்கம்மா, வட்டமா சுட்டுத்தருவாங்க, இப்பொழுது தான் அதன் காரணத்தை அறிந்து கொண்டேன். அவங்களுக்கு என் மேல் பாசமே இல்லை. உனக்கு என் மீது பாசம் அதிகம். எனக்காகத் தோசையப் பிச்சுப் பிச்சுக் கொடுத்திருக்க.. நான் பிச்சா என் கை வலிக்கும் தானே... டியர்.. என்னே உன் அன்பு எனப் பிஞ்ச தோசையில் ஒன்றை எடுத்து அவள் வாயில் ஊட்டினான் சேகர்.

இப்படித்தான் வெளியில் புலியாக இருந்தாலும் வீட்டில் எலியாக மாறி, தன் குடும்பத்தைச் சமாளித்துப் பல ஆண்கள் வாழ்கிறார்கள், அத்தகைய பொறுமை உடைய ஆண்களுக்குக் கோயில்கட்டித் தான் கும்பிட வேண்டும், நடமாடும் தெய்வம் அவர்கள்.

நன்றி : ஓவியம். மோகன் மணிமாலா



கட்டுரை ஆசிரியர் சேவு. முத்துக்குமார் அவர்கள் காரைக்குடியில் வசிக்கும் இரணிக்கோவிலைச் சேர்ந்த நகரத்தார். காரைக்குடி எஸ்.எம்.எஸ்.வி மேல்நிலைப்பள்ளியில் முதுகலைத் தமிழாசிரியராய்ப் பணியாற்றுபவர். கவிஞராக, பேச்சாளராக, எழுத்தாளராக, நாடக ஆசிரியராக, சதுரங்க ஒருங்கிணைப்பாளர் என பன்முகத் திறமை கொண்டவர். தினமலர் நாளிதழ் வழங்கிய ‘இலட்சிய ஆசிரியர்‘ விருதினைப் பெற்றவர்.


# பொங்கலோ பொங்கல்

தைத்திங்கள் தந்த பொங்கல் திருநாளையொட்டி
பொங்கல் பானைக்கு மஞ்சள் கொத்து தலைப்பாகைக் கட்டி
வண்ண வண்ணக் கோலம் நுழைவாயிலில் இட்டு
நடுவீட்டுக் கோலம் பூஜையறையில் இட்டு

நல்லவர்கள் நினைப்பைப் போல பொங்கி வரும் பொங்கல்
நல்லவற்றை நடத்திக்காட்ட பிறந்ததிந்தத் திங்கள்
பொங்கலோ பொங்கல் என்று உரத்த குரலில் வாழ்த்த
தோகை விரித்த கரும்பு நம்மை இனிப்பு சுவையில் ஆழ்த்த

ஏழுவகை காய்சமைத்து வாழை இலையில் நிறைத்து
பொங்கி வந்த பொங்கலையே சேர்த்து வைத்துப் படைத்து
பால்பொங்கிருச்சா?என்றவுடன் பொங்கக்காசு அளிக்க
இன்று வந்த திரைப்படத்தை இன்றே பார்க்கத் தவிக்க

இந்த சுகம் அள்ளித் தரும் உழவருக்கே பெருமை தினம்
வயல்வெளியைத் தொழுது உழும் உழவருக்கே பெரிய மனம்
வெள்ளை அடித்து தொடங்கியதே தமிழர் திருநாள் பொங்கல்
காணும் பொங்கல் கண்டுதானே நிறைகிறதே பொங்கல்.



கவிஞர் எம்.சோலை,
காரைக்குடி.

## WHY SPEND WHEN YOU CAN SAVE FOR COMPANY TAX BENEFIT?

# WHY PAY TAX ? WHILE WE HAVE 37/1....
# COMPANY TAX BENEFITS- 37/1


## EMPLOYER EMPLOYEE SCHEME

- **Proprietor/Partnership / Private Limited Company get tax Benefit by giving Partner / Director Individual Corpus.**
- **Partner/Director gets 10+ Times life cover.**
- **Company Spends by building Retirement corpus for Partner/Director.**
- **One Tool For WEALTH ACCUMULATION, RETIREMENT, LIFE COVER & TAX BENEFITS.**



***For more details***





# "நகரத்தார் திருமணம்"

(நகரத்தார் திருமண நடைமுறைகள் பற்றிய சிறப்புத் தொடர்)

-கட்டுரைத் தொகுப்பு: அண.சீனிவாசன், காரைக்குடி

பகுதி - 6



### பூமணம் இடுதல் :

பகவணம் செய்யும்போது மலர்களை பசும்பாலில் நனைத்து மணமக்கள் உடலில் மணிக்கட்டு, முழங்கை, தோள்பட்டை ஆகிய மூன்று இடங்களிலும் தொட்டு வாழ்த்துதலே பூமணமாகும். இதை மூன்று முறை செய்யவேண்டும். முதலில் மாமக்காரர்தான் செய்ய வேண்டும். அதேபோல் மாமக்காரர் தான் முடித்து வைக்கவேண்டும் மணவறையிலும் பூமணம் இடவேண்டும்.

### அரிமணம் இடுதல் :



முளைப்பாலிகை கிண்ணங்கள் ஐந்திலிருந்தும் முளை விட்ட தானியங்களைக் கொஞ்சம் கொஞ்சம் எடுத்துப்போட்டு வாழ்த்துதல் அரிமணமாகும். பகவணத்தின் போது மணமக்கள் இருவருக்கும் அரிமண இடுதல் நடைபெறும். பின்னர் மணவறையின் போதும் தம்பதிகளுக்கு எல்லோரும் அரிமணம் இடுவார்கள்.

### திருப்பூட்டுதல் :

மணமகளுக்கு, மணமகனின் வீட்டார் கொண்டுவந்த ஆடைகளை அணிவித்து நன்கு அலங்கரித்து



மணமேடை மீது கிழக்கு முகமாக நிற்கச் செய்வார்கள். பின்னர் மணமகனை அழைத்து மணமகளுக்கு எதிரே நிற்கச் செய்வர். மணமகளின் கைகள் இரண்டையும் ஏந்தச் செய்து அதில் பச்சரிசி, தேங்காய் முதலியவற்றைக் கொடுப்பார்கள்.

தேங்காயின் குடுமிப்பகுதி மணமகனை நோக்கி இருக்கவேண்டும். மணமகன் கோவிலில் இருந்து வந்துள்ள திருநீற்றை, தான் பூசிக் கொண்டு, மணமகள் நெற்றியிலும் பூசவேண்டும். பிறகு கோவில் மாலையை மணமகள் கழுத்தில் அணிவிக்க வேண்டும். பின்பு பெரியவர் ஒருவர் துணையுடன் அவர் எடுத்துத் தருகின்ற கழுத்துருவை வாங்கி மேல்பாகத்தில் திருமாங்கல்யம் உள்ள பகுதி வருமாறு பெண்ணுக்கு அணிவித்துக் கழுத்தின் பின்புறம் மூன்று முடிச்சு போடவேண்டும்.

முதல் இரண்டு முடிச்சுக்களை மாப்பிள்ளையும் மூன்றாவது முடிச்சை நாத்தனாரும் போடுவது மரபு. பிறகு தாலியை அணிவிக்க வேண்டும். அதன் பின்னர் திருமாங்கல்யத்திலும் மூன்று முடிச்சுகளின் மீதும் சிறுதாலியிலும் மஞ்சள் தொட்டு வைத்து குங்குமம் இடவேண்டும்.



மணமகள் கையில் உள்ள

பச்சரிசி, தேங்காய் முதலியவற்றை தாம்பாளத்தில் வைத்துவிட்டு, மணமக்கள் இருவரும் மூன்று முறை மாலை மாற்றிக் கொள்ளவேண்டும். மணமகன்தான் முதலில் மாலையிட வேண்டும். பிறகு தம்பதிகள் ஒருவருக்கொருவர் இனிப்பை பரிமாறிக் கொள்வது இன்றைய வழக்கம்.

திருப்பூட்டி முடிந்ததும், மணமக்கள் மாமக்காரருடன் வளவு, போய்முகப்பிலுள்ளவர்களிடம் வணங்கி ஆசிர்வாதம் பெறவேண்டும்.

திருப்பூட்டுதலின் போதும், மாலைமாற்றும் போதும் கெட்டிமேளம் வாசிக்கச் சொல்லவேண்டும். பிறகு அனைவருக்கும் ரொட்டி, மிட்டாய், சர்பத் கொடுக்கவேண்டும்.

### திருப்பூட்டும் முறைகள் :



நகரத்தார் திருமணங்களில் திருப்பூட்டுதல் மூன்று விதமாக நிடைபெறுகிறது. மேலவட்டகை எனப்பெறும் வலையபட்டி, மேலைச்சிவல்புரி, குழிபிறை ஆகிய பகுதிகளில் மாப்பிள்ளை மணையில் நிற்க, பெண் கீழே நிற்க திருப்பூட்டப்படுகிறது. கீழ்வட்டகை எனப்பெறும் காரைக்குடி, தேவகோட்டை, பள்ளத்தூர் ஆகிய பகுதிகளில் பெண் மணைமீது நிற்க, மாப்பிள்ளை கீழே நிற்க திருப்பூட்டப்படுகிறது.

தெற்கு வட்டகை எனப் பெறும் நாட்டரசன் கோட்டை, ஒக்கூர், அலவாக்கோட்டை ஆகிய பகுதிகளில் அறைக்குள் மாப்பிள்ளையும் பெண்ணும் சரிசமமாக நின்று திருப்பூட்டுதல் நடைபெறுகிறது.



## இசைவு பிடிமானம் எழுதுதல் :

இசைவு பிடிமான புத்தகங்கள் அச்சிடப்பட்டு கிடைக்கின்றன. அதில் தனித் தனியே இருதரப்பாரும் அவரவர்கள் கோவில் பிரிவுகள் விவரத்தினைப் பங்காளியைக் கொண்டு எழுதி மணமக்களின் தந்தைமார்கள் இருவரும் நடுவீட்டில் அமர்ந்து கையெழுத்துச் செய்து, மாப்பிள்ளை வீட்டார் எழுதியது பெண் வீட்டிலும் பெண் வீட்டார் எழுதியது மாப்பிள்ளை வீட்டிலும் இருக்கும்படியாக மாற்றிப் பெற்றுக் கொண்டு, வைத்துக் கொள்ள வேண்டியது. இதில் எழுதிய பங்காளிகளும் கையொப்பம் இடவேண்டும்.

## திருப்பூட்டுச் சடங்கு :



மணமகனின் தாயார் அல்லது சகோதரி அல்லது இருவரும் செய்கின்ற சடங்கு இது.

ஒரு சடங்குத் தட்டில் ஏழு கிண்ணங்கள் இருக்கும். அவற்றில் பிள்ளையார், வெத்திலைபாக்கு ஒன்றிலும், மற்றவை ஒவ்வொன்றிலும் மஞ்சள், விபூதி, பச்சரிசி, உப்பு, புளி, பஞ்சு முதலியனவும் வைத்திருப்பார்கள். ஒரு

படியில் நிறைய நெல் வைத்து அதன்மேல் கத்தரிக்காய் ஒன்று வைத்திருப்பார்கள் (இதனை நிறை நாழி‘ என்பர்) ஒரு கெண்டிச் செம்பில் (மூக்கு வைத்த செம்பு) தண்ணீர் வைத்திருப்பார்கள். இவைகளை மணையின் மீது கிழக்கு முகமாக நிற்க வைத்து, கீழே தடுக்கு போட்டு அதில் சடங்கு செய்கிறவர்கள் நின்று கொள்வார்கள். முதலில் சடங்கு தட்டில் உள்ள விபூதியை வலது கரத்தால் எடுத்து சடங்கு செய்கிறவர்கள் தான் பூசிக் கொண்டு, பிறகு பெண்ணுக்கும் பூச வேண்டும். இந்த ஏழுகிண்ணங்கள் ஒவ்வொன்றையும் மூன்று மூன்று முறை தொட்டு விபூதியைத் தானும் கழுத்தில் பூசிக் கொண்டு பெண்ணுக்கும் கழுத்தில் பூசவேண்டும்.


இவ்வாறு இருபத்தியொரு முறை பூசியதும் வலது கரத்தில் கெண்டிச் செம்பை எடுத்துக் கொண்டு மணமகள் கையில் ஒரு வெற்றிலையைக் கொடுத்து முதலில் நிறை நாழியை சடங்கு செய்பவர் இடது கையால் பிடித்துக் கொண்டு வலது கையினால் கெண்டிச் செம்புத் தண்ணீரை மணமகள் கையில் மணையின் மீது கிழக்கு முகமாக நிற்க வைத்து, கீழே தடுக்கு போட்டு அதில் சடங்கு செய்கிறவர்கள் நின்று கொள்வார்கள்.

முதலில் சடங்கு தட்டில் உள்ள விபூதியை வலது கரத்தால் எடுத்து சடங்கு செய்கிறவர்கள் தான் பூசிக் கொண்டு, பிறகு பெண்ணுக்கும் பூச வேண்டும். இந்த எழுகிண்ணங்கள் ஒவ்வொன்றையும் மூன்று மூன்று முறை தொட்டு விபூதியைத் தானும் கழுத்தில் பூசிக் கொண்டு பெண்ணுக்கும் கழுத்தில் பூசவேண்டும். இவ்வாறு இருபத்தியொரு முறை பூசியதும் வலது கரத்தில் கெண்டிச் செம்பை எடுத்துக் கொண்டு மணமகள் கையில் ஒரு வெற்றிலையைக் கொடுத்து முதலில் நிறை நாழியை சடங்கு செய்பவர் இடது கையால் பிடித்துக் கொண்டு வலது கையினால் கெண்டிச் செம்புத் தண்ணீரை மணமகள் கையில் உள்ள வெற்றிலையில் ஊற்றுவார். மணமகள் அந்த நீரைப் பாதங்களில் வடித்துவிட்டு இரு கைகளினாலும் வெற்றிலையை




நெற்றியில் வைத்து வணங்குவாள். இச்சடங்கு மூன்று முறை நிகழும். இது போலச் சிலேட்டு விளக்கு, பிள்ளைக் குழவி முதலியவற்றை வைத்துக் கொண்டு சடங்கு செய்வர். சடங்குகள் முடிந்ததும் சிலேட்டு விளக்கை நேராக வீட்டுக்குள் வைக்கவேண்டும். மற்ற பொருள்களை மணமகளின் பின்புறமாகச் சுற்றி இடவலமாகக் கொடுத்து வீட்டுக்குள் வைக்க வேண்டும்.

– தொடரும்...




நகரத்தார்கள் பயன் பெறும் வகையில் நகரத்தார் சமூக திருமண நடைமுறைகள் பற்றி வெளிவந்த சிறப்பு வெளியீடான நகரத்தார் திருமண நடைமுறை கையேடு புத்தகம் விலைக்கு வேண்டுவோர் கட்டுரை தொகுப்பாளர் திரு.அண .சீனிவாசன் அவர்களை 94443 44022 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும்.

நீ பட்ட துன்பத்தை விட அதில் நீ பெற்ற அனுபவமே சிறந்தது

உண்மைக்காக எதையும் துறக்கலாம், ஆனால் எதற்காகவும் உண்மையைத் துறக்கக் கூடாது.

பொய் சொல்லி தப்பிக்காதே; உண்மையை சொல்லி மாட்டிக்கொள். பொய் வாழ விடாது; உண்மை சாக விடாது

– சுவாமி விவேகானந்தர்

# பக்தி மணம் பரப்பும் வேந்தன்பட்டி நெய் நந்தீஸ்வரர் கோயில்



நகரத்தார் வட்டகையில் கீழப்பத்தூரின் ஒர் அங்கமான வேந்தன்பட்டி , புதுக்கோட்டை மாவட்டம் பொன்னமராவதிக்குத் தெற்கே 5 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது . சிறிய ஊராக இருந்தாலும் பெரும் ஆன்மிக சிறப்பை தன்னகத்தே கொண்டது இந்த ஊர் .

இவ்வூரின் தனிச்சிறப்பு நந்தி எம்பெருமான் இவ்வூரில் நெய் நந்தீஸ்வரராக அருள் பாலிக்கின்றார். தனது தோற்றம் முழுவதிலும் பசு நெய்யினைப் பூசிக் கொண்டு தன்னை வழிபடுவோர்க்கு நலன்கள் பல வழங்கி அருள்பாலிப்பதில் தலைசிறந்து விளங்குகின்றார். நந்தி எம்பெருமான் நெய் நந்தீஸ்வரராக அருள் பாலிப்பது இவ்வூரில் மட்டுமே. அதனால் இவ்வூர் தமிழகத்து ஊர்களில் தனிசிறப்பிடம் பெறுகின்றது.

ஊருக்குள் நுழைந்ததும் கண்களில் தென்படுவது நெய் நந்தீஸ்வரர் ஆலயம்தான். இவ்வூர் நகரத்தார் பெருமக்களின் மேற்பார்வையில் கோவில் நிர்வாகப் பொறுப்பு உள்ளது. சுமார் நூறு ஆண்டுகள் பழமை வாய்ந்தது இக்கோயில். எட்டுமுறை கும்பாபிஷேகம் கண்ட பெருமை உடையது. சிவபெருமானும் உமாதேவியும் மீனாட்சி சொக்கலிங்கேஸ்வரர் என்னும் திருப்பெயர் கொண்டு விளங்குகின்றனர். இவர்களைத் தவிர விநாயகர், முருகப்பெருமான், தெட்சிணாமூர்த்தி, சண்டிகேஸ்வரர், பைரவர் மற்றும் நவக்கிரக விக்கிரகங்களும் உள்ளன. ஆனாலும் இங்க நெய் நந்தீஸ்வரரே முக்கியக் கடவுளாக உள்ளார். இதனால் இக்கோவில் சிவன் கோவிலாக இருந்தாலும் நந்தி கோவில் என்றே ஊர் மக்களால் அழைக்கப்படுகிறது.

**தல வரலாறு :**



வேந்தன்பட்டி கிராமத்தில் நூறு ஆண்டுகளுக்கு முன்னரெல்லாம் சிவன் கோவில் கிடையாது. விநாயகர், முருகன் கோவில்கள் இருந்தாலும் சிவன் கோவில் இல்லை என்பதை ஒரு குறையாக அறியப்படாத காலம். அப்போது சுமார் நூறு குடும்பங்கள்தான் இவ்வூரில் இருந்தன.

இந்நிலையில் இம்மக்கள் வெளியூர்களில் சிவன் கோவில்களைப் பார்த்த பின்னர், தங்களின் இந்த ஊரான வேந்தன்பட்டியிலும், சிவன் கோவில் வேண்டும் என விரும்பியதை அடுத்து இங்கு சிவன் கோவில் கட்டி வைத்தனர். புதுக்கோட்டையில் உள்ள இக்கிராமத்தை அடுத்த கொடும்பாளூர் என்ற ஊரில் மிக பெரிய நந்தி சிலாரூபங்கள் செய்வது வழக்கம்.

இந்நிலையில் வேந்தன்பட்டி சிவனுக்கு எதிரே வைப்பதற்காக நந்தியினைப் பெற வேந்தன்பட்டி கிராம மக்கள் முடிவு செய்தனர். அப்போது கொடும்பாளூரில் ஒரே விதமான கல்லில் செதுக்கப்பட்ட ஐந்து நந்திகளில் ஒன்றைப் பெற்று வந்தார்களாம்.

கோவில் கட்டும் பணி பாதி மட்டுமே நிறைவேறி இருந்ததால், அந்நந்தியினை ஊர் குளத்தில் வைத்துள்ளனர். பல ஆண்டுகளுக்கு நீரில் மூழ்கியே ஜல வாசம் செய்தார் நந்தி. பூஜைகளும், போற்றுதல்களும் இல்லாமலேயே ஆண்டுகள் கழிந்தன.

இந்த நிலையில் ஊரில் கொள்ளை நோய் கிளம்பியது. இக்குளமும் வறட்சியால் தண்ணீர் வற்றியது. இக்குளத்தில் வளர்ந்துள்ள புல், பூண்டுகளை மேய்ந்த மாடுகளுக்கு மடி கட்டிக் கொண்டு பால் சுரக்க இயலாத நிலையும் ஏற்பட்டதாம். இக்கோவிலில் இருந்த சாமியாடி ஒருவர் மூலம், நந்திக்கு பசு நெய் பூசி, பூஜை செய்தால் ஊரும், மக்களும் செழிப்புறுவர் என்று கூறினாராம். மக்களும் அர்ச்சகர் மூலம் நந்தியை பிரதிஷ்டை செய்த பின், முதன்முறையாக நெய் பூச முற்பட, நெய்யாக இருப்பதால் ஈ, எறும்பு சாரி சாரியாக வந்தால் என்ன செய்வது என்ற குழப்பம் ஏற்பட்டுள்ளது. ஆனால் அதிசயமாக ஒரு வாரம் கழித்துக் கூட ஈ, எறும்புகள் வரவில்லை. இன்றும், இந்த அற்புதம் நிகழ்கிறது.

### தலப் பெருமையும் அதிசயமும் :

கோவிலுக்குள் நுழைந்தாலே நெய் மணக்கும். உள்ளே சென்றதும் முதலில் நாம் பார்க்கின்ற கடவுள் நெய் நந்தீஸ்வரர். இவருடைய தோற்றம் முழுதும் பசு நெய் அப்படியே உறைந்துள்ளது. அப்படி உறைந்திருக்கும் நெய்யில் ஈக்கள், எறும்புகள், பூச்சிகள் எதுவும் மொய்க்கவில்லை. இதைப் பார்க்கின்ற யாருக்கும் கண்டிப்பாக ஆச்சரியம் மேலிடும்.



பிரதோஷ நாளில் நெய் நந்தீஸ்வரருக்கு பிரதோஷ விழா வெகு சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. ஆயிரக்கணக்கான மக்கள் நெய் நந்தீஸ்வரரை சுற்றிலும் அமர்ந்து பிரதோஷ விழாவை கண்டுகளிக்கின்றனர். அன்று நெய் நந்தீஸ்வரருக்கு நெய்யினால் அபிஷேகம் செய்யப்படுகிறது. அபிஷேகம் செய்யப்பட்ட நெய் நந்தீஸ்வரரின் தோற்றம் முழுக்க நிறைந்து தரையில் வழிந்து தேங்கி நிற்கிறது. மறுநாள் அதை ஒரு பாத்திரத்தில் எடுத்து நெய்க்கிணற்றில் கொட்டுகிறார்கள். இந்த நெய்யை, நெய் கிணற்றில் ஊற்றினாலும், அக்கிணற்றைச் சுற்றி ஈ, எறும்புகள் வருவதில்லை. மேலும் நெய் நந்தீஸ்வரரின் திருமேனியை ஈ, எறும்புகள் மட்டுமல்லாமல் பிற பூச்சிகளும் அண்டுவதில்லை என்பது அதிசயம்.

வேந்தன்பட்டியைச் சுற்றி எட்டு கிராமங்கள் உள்ளன, இந்தக் கிராமங்களில் பசுமாடு வைத்திருப்பவர்கள் பாலைக் கறந்து, காய்ச்சி, நெய் எடுத்து ஸ்ரீநெய் நந்தீஸ்வரருக்கு காணிக்கையாக செலுத்திய பிறகுதான் பாலை விற்கவோ சொந்த உபயோகத்துக்கு எடுத்துக் கொள்ளவோ செய்கிறார்கள். இந்தப் பழக்கம் இன்னும் இந்த ஊர்களில் நடைமுறையில் இருக்கிறது.

நெய் நந்தீஸ்வரருக்கு தனப்ரியன் என்ற ஒரு பெயரும் உண்டு. இரு கொம்புகளுக்கு இடையே சக்கரம் ஒன்று உள்ளது. இது இயற்கையாகவே அமைந்த அமைப்பு. இந்த அமைப்பு இந்தியா முழுதும் உள்ள எந்த நந்தீஸ்வரரின் தோற்ற அமைப்பிலும் நிச்சயம் கிடையாது. நெய் நந்தீஸ்வரரின்

தோற்றத்தில் இந்தச் சக்கரம் மிக முக்கியத்துவம் பெறுகிறது. உலகமே அழியும் நிலை வந்தாலும் தான்இருக்கும் ஊர் அழிய சம்மதிக்காதவர் இந்த நெய் நந்தீஸ்வரர் என்று ஊர் மக்கள் சொல்கிறார்கள். பல வருடங்களாகக் குடியிருந்த தங்கள் சொந்த வீட்டையே நெய் நந்தீஸ்வரருக்காக விட்டுக் கொடுத்தவர்கள் கூட இவ்வூர் மக்களில் பலர் உண்டு.

வருடந்தோறும் வருகின்ற தை மாதத்தில் மாட்டுப் பொங்கல் அன்று அதிகாலை 4 மணிக்கு ஸ்ரீ நெய் நந்தீஸ்வரருக்கு நந்தி விழா என்ற ஒரு விழாவினை ஊர் மக்கள் நடத்தி வருகிறார்கள். நந்தி விழா தினத்தன்று அபிஷேகங்கள் முடித்த பிறகு 21 வகையான மாலைகளால் அழகுபடுத்தி பல்வேறு தீப ஆராதனைகள் நடத்துகின்றனர். எந்த ஊரிலும் நடைபெறாத இந்த நந்தி விழா இவ்வூரில் மிகவும் சிறப்புடன் நடைபெறுகின்றது. நந்தி எம்பெருமானுக்கு குளப்பிரியன், பிரதோஷப்பிரியன் என்கிற பெயர்களும் உண்டு.

**நெய்க்கிணறு :**



கோயிலின் உள்ளே வடக்குப்பக்கத்தில் நந்தவனத்தின் உள்ளே ஈசான்ய மூலையில் நெய்க்கிணறு என்ற அதிசய அமைப்பு உள்ளது. அபிஷேகத்தின் போது தரையில் வழியும் நெய்யை பாத்திரத்தில் எடுத்து இந்த நெய்க்கிணற்றில் கொட்டுகிறார்கள். இந்தக் கிணற்றின் உள்ளே

தேங்கியிருக்கும் நெய்யில் கூட ஈக்கள், எறும்புகள் பூச்சிகள் எப்போதும் மொய்ப்பது கிடையாது.

## சுயம்பு நந்தி :



வேந்தன்பட்டியில் உள்ள கச்சேரிக்கூடம் என்னும் பகுதியில் 90 ஆண்டுகளாக வேப்பமரம் ஒன்று உள்ளது. இந்த வேப்பமரத்தில் நெய் நந்தீஸ்வரர் சுயம்புவாகத் தோன்றியிருக்கிறார். மிகப்பழமை வாய்ந்த இந்த வேப்ப மரத்தில் நெய் நந்தீஸ்வரரின் முகம் தெளிவாகத் தெரிகிறது. இந்தச் சுயம்பு நந்திக்கு வேப்பமரத்து நந்தி என்று பெயரிட்டு மிகுந்த பயபக்தியுடன் வழிபட்டு வருகின்றனர்.

## ரிஷப ராசி கோயில் :

நந்தீஸ்வரருக்கு ரிஷபம் என்றும் பெயருண்டு. எனவே, ரிஷப ராசிக்காரர்களுக்கான பரிகாரத் தலமாகவும் இக்கோயில் திகழ்கிறது. ஜாதகத்திலோ அல்லது அவ்வப்போது நிகழும் கிரகப் பெயர்ச்சிகளாலோ பாதிக்கப்படும் இந்த ராசிக்காரர்கள், நிவர்த்திக்காக இங்கு வணங்குகின்றனர். நந்திக்கு முக்கியத்துவம் உள்ள கோயில் என்பதால், நந்திக்கு அர்ச்சனை செய்யும் வழக்கமும் உள்ளது. கால்நடை வளர்ப்போர், அவை நோயின்றி வாழவும், பால், தயிர், மோர், வெண்ணெய், நெய்



ஆகிய பொருட்களை விற்பனை செய்வோர் வியாபாரம் செழிக்கவும் இங்கு அதிகளவில் வேண்டிச் செல்கின்றனர். நோயால் அவதிப்படும் கால்நடைகள் குணமாக, நந்திக்கு அபிஷேகம் செய்த தீர்த்தத்தைப் பெற்றுச் சென்று அதற்கு புகட்டுகின்றனர். இதனால், அவற்றிற்கு நோய் நிவர்த்தியாவதாக நம்பிக்கை. இங்கு வணங்கி பசு மாடுகளை வாங்குவோர் முதலில் சுரக்கும் பால் மற்றும் முதலில் உருக்கிய நெய்யால் அபிஷேகம் செய்து வழிபடுகின்றனர். ஜல்லிக்கட்டில் பங்கேற்கும் காளைகள் வெற்றி பெறுவதற்காகவும் இங்கு வேண்டிச் செல்கின்றனர்.

அக்னி காவடி வைபவம்: வைகாசி விசாகத்தை ஒட்டி இங்கு 3 நாள் விழா நடக்கும். விசாகத்தன்று 'அக்னி காவடி' தூக்கும் வைபவம் விமரிசையாக நடக்கும். அப்போது, இங்கு வேண்டி பிரார்த்தனை நிறைவேறிய பக்தர்கள் காவடி தூக்கிக் கொண்டு, பூக்குழியில் இறங்குவர். நந்தீஸ்வரருக்கு முடிக்காணிக்கை செய்து நேர்த்திக்கடன் செலுத்துவதுமுண்டு. கோயில் எதிரே நந்தி தீர்த்த தெப்பம் உள்ளது. சுவாமிக்கு இடப்புறம் மீனாட்சி சன்னதி உள்ளது. பிரகாரத்தில் சூரியன், விநாயகர், வள்ளத தெய்வானையுடன் சுப்பிரமணியர், மகாலட்சுமி, பைரவர், நவக்கிரகம், சூரியன் ஆகியோர் உள்ளனர்.



மாதந்தோறும் வருகின்ற பிரதோஷ நாட்களிலும் வருடந்தோறும் வருகின்ற முக்கியத்திருவிழா நாட்கள், பண்டிகை நாட்களில் நெய் நந்தீஸ்வரரைப் பார்க்க வருகின்ற பக்தர்களுக்கு வழங்கப்படும் பிரசாதங்கள் அனைத்தும் மிகுந்த சுவையுடையது என்று சொல்கிறார்கள்.

**அமைவிடம் :**

புதுக்கோட்டை மாவட்டம் பொன்னமராவதிக்குத் தெற்கே 5 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது வேந்தன்பட்டி.. இந்த அபூர்வக் கோயிலுக்கு தமிழகத்தின் பல்வேறு ஊர்களில் இருந்து வருகின்றார்கள். சென்னை, மதுரை, கோவை, ஈரோடு, திண்டுக்கல், சேலம், திருப்பூர், புதுக்கோட்டை, தஞ்சாவூர் போன்ற ஊர்களில் இருந்து பொன்னமராவதிக்கு நேரடி பேருந்துகள் உள்ளன. பொன்னமராவதியில் இருந்து வேந்தன்பட்டி வருவதற்கு நிறைய பேருந்துகள் உள்ளன.

காலை 7.00 மணி முதல் பகல் 12 மணி வரை மற்றும் மாலை 4.30 மணி முதல் இரவு 8.30 மணி வரை ஆலயம் திறந்திருக்கிறது.



கவியரசர் கண்ணதாசனால் இத்திருத்தலம் நெய் நந்தீஸ்வரரை போற்றி பாடல் ஒன்றை பாடியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. அந்த பாடலையும் இங்கு பார்ப்போம்.

கொடும்பாளூரில் பிறந்தவராம்
கொடுக்கும் வரம் பெற்றவராம்
வேந்தன் நகர் வளர்ந்தவராம்
வேண்டும் வரம் அளிப்பவராம்
அண்ணன் அவன் தஞ்சையிலே
தம்பி இவன் வேந்தனிலே
பெருமையுடன் விளங்குகின்ற
பெருமகனார் இருவருமே

ஒரு கருவில் உருவாகி – மறுபிறவி
ஒரு கல்லில் உருவான
எம்பெருமான் நந்தி இவர்
கம்பீரத் தோற்றம் இவர்
கலியுக வரதன் இவர்
தன் மேனி நெய்குளிக்க
அர்ச்சகரும் அதை எடுத்து
தீபத்தின் உயிரூட்ட
குருதி வெள்ளம் பெருகியதே
தன்னருகில் வந்து நின்று
தன்மேனி ஆழம் கண்ட
அடியோனை குஷ்டமெனக் காட்டியது அளவென்று
நெய்நின்று அண்டாது ஐந்து வகை ஜீவன்கள்
நெற்றியிலே தாங்கியுள்ளார்
பெருமைமிகு சக்திதனை
தனித்து மட்டும் இல்லாது
சிவனார்க்கும் வழிவிட்ட
எம்பெருமான் நந்தி இவர்
பாரெங்கும் புகழ் பரப்பி
வேந்த நகர் செழித்தோங்கி
என்றென்றும் துணையாயிருப்பாய்
நந்தி எம்பெருமானே
என் தெய்வம் கண்ணபிரான்
விரும்புவதும் நெய்தானே

என்றென்றும் குறைவில்லாது
அவனுக்கதை அளித்திடுவாய் நந்தி எம்பெருமானே.

நகரத்தார் பெருமக்களால் திருப்பணி செய்யப்பெற்ற இந்த நெய் நந்தீஸ்வரர் கோவிலுக்கு இதுவரை எட்டு முறை கும்பாபிஷேகம் நிகழ்ந்துள்ளது . தற்போது இந்தக் கோயிலின் **9 வது கும்பாபிஷேகம் 22 பிப்ரவரி 2024 (மாசி மாதம் 10ம் தேதி)** அன்று சிறப்பாக நடைபெற உள்ளது. அதிசயங்கள் மிகுந்த நந்தியெம்பெருமானை நாமும் சென்று வணங்கி அவர் அருளால் நலமும் வளமும் பெறுவோமாக.



**கட்டுரையாக்கம்**
செந்தில் நாகப்பன்,
வேந்தன்பட்டி

கீழ்ப்படியக் கற்றுக்கொள்.
கட்டளையிடும் பதவி தானாக
உன்னை வந்து அடையும்.

– சுவாமி விவேகானந்தர்



நாம் நகரத்தார் டெலிகிராம் சேனலில்
இணைந்து உங்கள் மொபைலிலேயே நமது
மின்னிதழை மாதமிரு முறை பெற்றிடுவீர்
t.me/naamnagarathar
Join Telegram

# கோயில் மாலை

கல்லல் மீ.மணிகண்டன், Texas, USA

ஜூலை மாத வெய்யிலை நொந்துகொண்டே வீட்டினுள் நுழைந்தார்கள் கணேசனும், மகன் வள்ளியும், டூ ஹாட் பா, சீக்கிரம் டெக்சாஸ் போகணும், என்ற வள்ளியிடம் அப்பா கணேசன் கேட்டார், அங்க மட்டும் என்ன இப்ப குளு குளுன்னு ஸ்னோ வா வரும்? அங்கேயும் இதே வெயில்தான்.

நோ டாட், அட்லீஸ்ட் ஏ சி இருக்கும்ல, இங்க வளவுல வெயிலுக்கு நடுவுல... ஐ கான்ட் பேர் இட்

வீட்டினுள் இவர்களின் வருகையைக் கண்ட வள்ளியின் அம்மா மெய்யம்மை, வெயிலில் களைத்துச் சோர்வாக வரும் இருவருக்காகக் குளிர்ந்த நன்னாரி குளிர்பானத்தை இரண்டு குவளைகள் நிறைத்துத் தட்டில் ஏந்தி வந்தாள். வாயில், முகப்பு, ஹால்வீட்டைத் தாண்டி வளவில் நுழைந்து மேற்பத்தி ஓரமாக அமர்ந்து ஆளுக்கொரு தூணில் ஆயாசமாகச் சாய்ந்தனர் வள்ளியும் அப்பா கணேசனும். இருவரிடமும் குளிர்பானத்தை நீட்டிக்கொண்டே, குலதெய்வம் கோயில் வேளாருக்கு சொல்லீட்டிங்களா? வர்ற ஞாயிற்றுக் கிழமை காலையில வந்துருவோம்னு ஒரு தடவைக்கு ரெண்டு தடவை சொன்னீங்களா? வயசான காலத்துல அவர் பாட்டுக்கு கிழமையை மறந்து வைக்கப்போறாரு என்றாள் மெய்யம்மை.

நல்லா திரும்பத் திரும்பச் சொல்லியாச்சும்மா, என்று வள்ளி பதிலளித்தான். ரெண்டாங்கட்டிலிருந்து வளவிற்கு வந்த வள்ளியின் அப்பத்தா வள்ளியம்மை, என்ன பேராண்டி எங்க ஊர் வெயில் எப்படி இருக்கு? என்று கேட்டார்.

நம்ம ஊர்ன்னு சொல்லுங்க அப்பத்தா, நான் அமெரிக்கால வளர்ந்தாலும் இது நம்ம ஊர் என்பது மாறாது,



எனக்கும் அப்படி சொல்லத்தான் புடிச்சிருக்கு, என்று ஊர்ப்பாசத்தில் உரிமையுடன் உரைத்தான் வள்ளி. அந்த நெனப்பு போதும்யா நம்ம ஊரும், குலதெய்வமும் உன்னை நல்லா வச்சுக் காப்பாத்தும், எப்பவும் ஊரையும் குலதெய்வத்தையும் நல்லா நெனச்சிக்க, எத்தனை கடல் தாண்டினாலும் ஏன்னு கேக்குற ஒரே சாமி அவுகவுக குலசாமி மட்டுந்தான், என்று பேரன் வள்ளிக்கு வாழ்க்கைப்பாடம் சொன்னார் அப்பத்தா.



வளவுக் கீழ்ப்பத்தியில் உத்தரத்தின் கையில் தொங்கிக்கொண்டு சரக் சரக் சத்தத்தோடு எண் மூன்று வேகத்தில் சுழன்றுகொண்டிருந்தது காற்றாடி. காற்றடிக்கு நேர் கீழே அமர்ந்துகொண்டு இரண்டு காலம் போட்ட கணக்கு நோட்டில் வீட்டுச் செலவுக்கணக்கு எழுதிக்கொண்டிருந்தார் பழனியப்ப ஐயா, கணேசா நீ அனுப்புன பணம் ஒரு லட்சம் வந்துருச்சு உன் கணக்கில் வரவு வச்சுக்கறேன், செலவுகளை எழுதிட்டு பாக்கியச் சொல்லுறேன், என்று கட்டுச்செட்டாகக் குடும்பம் நடத்தும் பழனியப்ப செட்டியார், மகன் கணேசனிடம் சொல்ல, அன்புக் கோபம் கொண்டார் கணேசன் செட்டியார், என்ன அப்பா இது நாம நம்ம வீட்டுச் செலவு செய்யிறதெல்லாம் கணக்கு நோட்டில் எழுதணுமா? அவனவன் கம்பெனிக் கணக்கையே எழுதாம முழுங்கிச் சுவாகா செய்யுறான், என்று வெளி நடப்பைச் சொல்லி தந்தையாரின் அதீத கண்ணியம் எதார்த்த வாழ்க்கையில் அவசியம் இல்லை என்பதுபோல பதிலளித்தார்.

குப்பைல போட்டாலும் குறிப்பேட்டுல குறிச்சுவச்சுட்டு போடுறதுதான் நம்ம வழக்கம், அமெரிக்கா போன நீ வேணும்னா இதிலிருந்து விலகிப் போயிருக்கலாம், எனக்கு இந்தப் பழக்கம் இன்னைக்கி நேத்து வந்ததில்லை, அதனால எப்பவும் மாறாது. மேலும் வெட்டிச்செலவு செய்யல எல்லாம் தேவையான செலவுதான் செஞ்சிருக்கோம்ங்கற குறிப்பை பின்னாளில் பார்க்கும்போது மன நிம்மதியும் இதுல எனக்கு கிடைக்கும், என்று பதிலளித்த பழனியப்ப ஐயாவின் அருகில் ஆச்சரியமாக வந்தமர்ந்தான் வள்ளி. வாட்... ஐயா வீட்டுச் செலவெல்லாம் நோட்டுல எழுதி வைப்பீங்களா?, என்று ஆச்சரியமாகக் கேட்டான்.

நீங்க கம்ப்யூட்டர்ல அலுவலகக் கணக்கு பதியிற மாதிரி இது வீட்டுக் கணக்கு, அதிருக்கட்டும் பேராண்டி, நேத்து நீங்க சொன்ன செய்தியை ராத்திரியெல்லாம் யோசிச்சேன், நீங்க வளர்ந்த சூழலுக்கு அது சரிதான், என்று மெல்லிய குரலில் வள்ளியின் செவியில் மட்டும் கேட்கும்படி சொன்னார் ஐயா. ஆயிரம் மலர்கள் மலர்ந்தன வள்ளியின் மனதினுள். அப்படியென்ன ரகசியம் ஐயாவுக்கு பேரனுக்கும், என்று வினவினார் அம்மா மெய்யம்மை.

ஒண்ணுமில்லத்தா சொல்றேன் சொல்றேன்... என்று மெய்யம்மையிடம் சமாளித்தார் மாமனார் பழனியப்ப செட்டியார்.

இவன் எண்ணமாவது வேணும்னு கேட்டிருப்பான் அப்பா வாங்கித்தரேன்னு சொல்லியிருப்பாங்க, வேறென்ன... என்று எதார்த்தமாகச் சொன்ன கணேசன் தொடர்ந்து, காருக்கு பெட்ரோல் போட்டுக்கிட்டு வந்துடறேன்பா, நாளைக்கி பங்காளி வீட்டுத் திருமணத்துக்குக் காலையில் புறப்படுற அவசரத்துல பெட்ரோல் போட நேரம் இருக்காது, என்று சாமிவீட்டு அலமாரியிலுருந்து கார்ச்சாவியை எடுக்கச்சென்றார். அன்றளவில் பழனியப்ப ஐயா மற்றும் வள்ளிக்கு இடையேயானா உரையாடலை சாதாரணமாகக் கடந்துசென்றனர் பழனியப்ப செட்டியார் குடும்பம்.

இருந்தாலும் நாளை அவர்கள் பள்ளத்தூர் திருமணத்திற்கு செல்லும் முன் இன்று இரவே அந்தத் தகவலை உங்களுக்குச் சொல்லிவிடுகிறேன், அது வேறொன்றுமில்லை வள்ளி அமெரிக்காவில் உடன் பணி செய்யும் ஒரு அமெரிக்கப் பெண்ணை விரும்புகிறான், தாய் தந்தையர் அதற்கு சம்மதம் தரமாட்டார்கள் என்று பழனியப்ப ஐயாவின் துணையை நாடியிருந்தான், அதற்குத்தான் ஐயா வள்ளிக்கு ஆதரவாக பதிலளித்திருந்தார் வள்ளியின் மனதில் ஆயிரம் மலர்கள் மலர்ந்தும் அதனால்தான். இனி இச்செய்தியை கணேசன் மற்றும் மெய்யம்மையிடம் பேசிச் சம்மதம் வாங்கவேண்டிய பொறுப்பு ஐய்யாவினுடையது. சரி வாருங்கள் இனி என்ன நடக்கிறது என்று பார்ப்போம்.

அடுத்தநாள் பங்காளி வீட்டுத் திருமணத்திற்கு பள்ளத்தூருக்கு எல்லோரும் ஒரே காரில் புறப்பட்டனர். கணேசன் ஓட்டுநர் இருக்கையில் அமர பக்கத்தில் பழனியப்ப ஐயா அமர்ந்துகொண்டார், பின்னிருக்கையை அப்பத்தா வள்ளியம்மை, அம்மா மெய்யம்மை மற்றும் வள்ளி மூவரும் பகிர்ந்துகொண்டனர். செம்மண் வீதியில் புழுதியைக் கிளப்பிக்கொண்டு புறப்பட்டது வெள்ளை மாருதி சுசூகி. பழனியப்ப ஐயா எல்லாச் செய்கையிலும் சுறுசுறுப்பாகவும் நேரத்திற்கும் இயங்குபவராதலால் இந்தத் திருமணத்திற்கும் காலைப்பொழுதில் வெள்ளன வந்துவிட்டார்கள். இது பெண் வீட்டார் திருமணம். விமான ஓடுதளம்போல சுருக்கமின்றிச் சமமாகவும் உறுதியாகவும் இரண்டு முகப்புத்திண்ணையிலும் பெரிய சதுரச் சமுக்காளம் விரிக்கப்பட்டிருந்தது.



நீலப்பட்டையில் வெள்ளை மற்றும் சிகப்புக் கோடுகளால் சமுக்காளம் நிறைந்திருந்தது. காலைப் பலகாரத்தை அளவாக எடுத்துக்கொண்டு பழனியப்ப ஐயா முகப்புச் சமுக்காளத்தில் வந்து அமர்ந்திருந்தார், ஐயாவுடன் உணவருந்திவிட்டு வந்த வள்ளியும் அவர் அருகில் அமர்ந்து ஐயா பிறரிடம் பேசும் தகவல்களை கவனித்தவண்ணம் இருந்தான். சமுக்காளத்தின் ஒரு முனையில்என்று சிவப்பு நிறப் பருத்தி நூலால் பின்னப்பட்டிருப்பதைக்காட்டி, இது என்ன ஐயா?, என்றான் வள்ளி. அவர்கள் வீட்டு விலாசத்தை எழுதியிருக்கிறார்கள், என்று விளக்கமளித்தார் ஐயா.

வாசற்படிகள் ஏழு ஏறி முகப்பில் வந்து நின்றார் எளிமையான தோற்றத்துடன் ஒருவர், ஒரு வாரம் சவரம் செய்யாத கன்னங்கள் ஆங்காங்கே நரை முடிகளை நீட்டிக்கொண்டிருந்தன, மெல்லிய கருத்த உடல்வாகு, தலைமுடிகளில் வெள்ளையும் கருப்பும் கலந்திருந்தன, படியச் சீவியிருந்தார், பட்டையாக விபூதியும் மையமாகக் குங்குமம் வைத்திருந்தார்,

வெள்ளைச்சட்டை மற்றும் வெள்ளை வேட்டி உடுத்தியிருந்தார், வேட்டி சற்று பழுப்பு நிறமாகியிருந்தது. கையில் ஒரு பாலிதீன் பையில் இரண்டு சிறிய பூ மாலைகளும் விபூதி குங்குமப் போட்டலங்களும் வைத்துக்கொண்டிருந்த அவர், ஐயா இதுதானே பொண்ணு வீடு, என்று பெண்ணின் தகப்பனார் பெயரைக் கூறிக்கொண்டே தனது சட்டைப் பையில் மடித்து வைத்திருந்த திருமனப் பத்திரிகையை எடுத்து முகப்புத் திண்ணையில் அமர்ந்திருந்தவர்களில் ஒருவரிடம் நீட்டினார். அவரும், ஆமாய்யா, நீங்க யாரு... வைராவியா? என்று வினவிக்கொண்டே வீட்டினுள் தலையைத் திருப்பி கையை நீட்டி யாரையோ அழைத்தார், அவரின் வலது கை மோதிர விரலில் சின்னக் கிளையின் அளவைத் தாண்டிய பூவைப்போல வைர மோதிரம் பளபளத்தது தங்க நிறச் சங்கிலியில் ரேடோ கைக்கடிகாரம் தலைதாழ்த்திக் கிடந்தது .



அழைத்துவிட்டு, இந்தா கோயில் மாலை கொண்டாந்திருக்காக வாங்கி சாமிவீட்டுக்குள்ள வைங்க, அவரை சாப்பிடக் கூட்டிப் போய் பந்தியில உட்கார வைங்க, என்றார் தொடர்ந்து அந்த வைர மோதிரம். வைர மாத்திரம் ஒரு முக்கியப் புள்ளியாக இருக்கவேண்டும், அவரின் அழைப்பு பெண்வீட்டாரின் முக்கியமானவர்கள் காதில் விழுந்திருக்கவேண்டும், காரணம் வைர மோதிரம் சொன்ன அனைத்தும் அடுத்தடுத்து தொடர்ந்து தொய்வின்றி நிகழ்ந்தது. வைராவி காலைப் பலகாரத்திற்குப் பந்தியில் அமர்ந்திருந்தார்.



இவற்றைக் கவனித்துக்கொண்டிருந்த வள்ளி, ஐயாவின் காதைக் கடித்தான், ஐயா, யார் இவர், இம்பார்ட்டண்ட் பெர்சனா? பார்த்தா ரொம்ப சிம்பிளா இருக்கார்? எதுக்கு மாலை கொண்டு வந்திருக்கார்? திருமணத்திற்கு கிப்டா? பேரனின் ஆவலைப் புரிந்துகொண்ட பழனியப்ப ஐயா வைராவி யார் என்பதை விளக்கத் தொடங்கினார். வள்ளி, யெஸ், அவர் முக்கியமானவர்தான் அவர் வரலைன்னா நகரத்தார்

திருமணம் நடக்காது, மேலும் அவர் கொண்டு வந்த மாலைகள் கிப்ட்னு சொல்ல முடியாது ஆனாலும் அதுதான் நகரத்தார் வீட்டு பொண்ணு மாப்பிள்ளைக்கு முக்கியமான கிப்ட். குழம்பிப்போனான் வள்ளி, ஐயா எனக்குப் புரியுற மாதிரி சொல்லுங்க ப்ளீஸ், சிரித்துக்கொண்டார் ஐயா, அதாவது, இது ஒரு வகையில் ரெஜிஸ்ட்ரேஷன் அண்ட் அப்ரூவல் ஃபார் நகரத்தார் மேரேஜ்.

மாப்பிள்ளை வீடானாலும் சரி பொண்ணு வீடானாலும் சரி திருமணத்துக்கு கொஞ்ச நாள் முன்னாடி அவங்கவங்க கோயிலுக்கு போய் பாக்கு வைக்கணும் அதாவது திருமண பத்திரிகை கொடுத்து மாப்பிள்ளை வீடா இருந்தா பெண் எந்தக் கோயில் என்றும், பெண் வீடா இருந்தா மாப்பிள்ளை எந்தக் கோயில் என்றும் விவரங்களை பதிவு செய்யணும்.

ஒவ்வொரு கோயில்லேயும் அந்தக்காலத்துல இருந்து தொடர்ந்து இந்த விவரங்களை பாதுகாத்து வராங்க. உங்க மொழியில சொல்லனும்னா டேட்டா கலெக்டின். இந்த பழைய டேட்டாவை வச்சு பெண் வழியும் மாப்பிள்ளை வழியும் நகரத்தார் ஆரிஜின்தான் என்று உறுதிப் படுத்துவாங்க, பிறகு திருமணத்தன்னிக்கு காலையில அந்தக் கோயில்ல இருந்து ஒருத்தர் இரண்டு மாலைகளும் கோயில் பிரசாதமும் கொண்டுவருவார். அப்படி கொண்டு வர்ரவர் கோயிலில் வேலை செய்யுற சிப்பந்தி, அவரை வைராவின்னு சொல்லுவாங்க.

இப்ப புரிஞ்சுதா? இவைற்றை கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்த வள்ளி, இட்ஸ் சோ இம்ப்ரெஸ்ஸிவ், என்று சொல்லிப் பூரிப்படைந்தான் அடுத்ததாக மெல்லிய குரலில், ஐயா இந்த சிஸ்டம் வெரி ஏன்சியன்ட், என்னோட திருமணத்துக்கும் அமெரிக்காவுக்கு வைராவியை வரச்சொல்லுங்க என்னோட பிரெண்ட்ஸ்கிட்ட நம்ம சிஸ்டம் பத்தி சொன்னா அவங்க ஆச்சரியப் படுவாங்க.

அதுதானே முடியாது பேராண்டி... என்று நகைத்தார் ஐயா.

ஏன் ஐயா, டிராவல் அண்ட் விசா பத்தி நீங்க கவலை படாதீங்க அப்பா மேனேஜ் பண்ணிக்குவாங்க.

இது வெறும் செலவுநடை சம்பந்தப் பட்டதுமட்டுமில்ல பேரா, அதையும் தாண்டிய வரலாறு.

சோ, என்ன சொல்ல வரீங்க.

நான் சொன்ன மாதிரி, பொண்ணு மாப்பிள்ளை ரெண்டு பேரும் நகரத்தார் குடும்பமாக இருக்கணும். நீ திருமணம் செய்யப்போறதோ அமெரிக்கன், அதுனால உனக்கு கோயில் மாலை வராது.

ஓஹ்... நௌ ஐ காட் இட்... ஒரு கணம் மலைத்தவன் அடுத்த கணம் மனதை மாற்றிக்கொண்டான்.

திருமணத்திற்கு வந்துகொண்டிருந்த பெருந்திரளை வரவேற்ற அந்த வைர மோதிரம், ஒரு ஆச்சியிடம், எங்கே பிள்ளைகளைக் கூட்டி வரலையா? என்றார்.

ஆகஸ்ட் 15க்கு பள்ளிக்கூடத்துல பேரெட் பயிற்சி இருக்குன்னு பள்ளிக்கூடம் போயிட்டாங்க, என்று புன்னகைத்தவாறு பதிலளித்தார் வந்திருந்த ஆச்சி.

அட... அது முக்கியம்தான் ஆத்தா, அதே நேரம் நம்ம வீடுகளுக்கு விசேடங்களுக்கு பிள்ளைகளை கூட்டி வருவதும் முக்கியம், அப்பத்தான்னே நாளைப்பின்ன அவுகளுக்கு நம்ம பழக்கவழக்கங்கள் தெரியும், என்று வளரும் தலைமுறைகள் திருமணம் மற்றும் வைபவங்களைக் காண வேண்டிய முக்கிய காரணத்தை எடுத்துச்சொன்னார் வைர மோதிரம்.

திருமணம், திருப்பூட்டுதல் மதிய விருந்து, பந்திவிசாரிப்பு, மேலும் சடங்குகள், இடைப்பலகாரம்

என்று சிறப்பாக நிறைவேற பழனியப்ப செட்டியார் குடும்பத்தார் பங்காளிகளிடம் சொல்லிக்கொண்டு புறப்பட்டனர்.

காரில் வீட்டிற்குத் திரும்பும் வழியில் இருந்த பள்ளிக்கூடத்தின் முன் சிறு சிறு கூட்டமாக தங்கள் பிள்ளைகளை அழைத்துப்போக சைக்கிள் மற்றும் இரு சக்கர வாகனங்கள் வைத்துக்கொண்டு காத்திருந்தனர் பிள்ளைகளின் பெற்றோர். ஆங்காங்கே பூத்த வெள்ளைக் காளான்களாக பிள்ளைகளும் வெள்ளைச் சீருடையில் சிட்டுச் சிட்டாகத் தங்கள் பெற்றோரை நோக்கி பள்ளிவளாகத்திலிருந்து வெளியேறிக்கொண்டிருந்தனர்.

ஞாயிற்றுக்கிழமை ஏன் இவ்வளவு கூட்டம்?, என்று வினவினார் வண்டியைச் செலுத்திக்கொண்டிருந்த கணேசன். பழனிப்ப ஐயா பதிலளித்தார், சுதந்திர தினம் வருத்தில்ல, அதுக்கு பேரெட் பயிற்சியாயிருக்கும், என்று பதிலளித்துவிட்டு, வள்ளி சுதந்திர தினம் பற்றி தெரியுமா? என்று பேரனை வினவினார். தெரியும் ஐயா, இந்தியா வெள்ளையர்களிடமிருந்து விடுதலை வாங்கிய நாள், ஆகஸ்ட் 15, ஐ நோ, நிறையப்பேர் இந்த சுதந்திரத்திற்காக உயிரை தியாகம் செஞ்சிருக்காங்க, சிறையில் சிரமப்பட்டிருக்காங்க, குடும்பம் உறவுகளை பிரிஞ்சு இருந்திருக்காங்க... லாஸ்ட் இயர் நாங்க வந்த பொது நீங்க சொன்னீங்களே எனக்கு ஞாபகம் இருக்கு.

பரவால்ல ஞாபகம் வச்சிருக்க, என்று பேரனின் ஞாபகத் திறனைப் பாராட்டினார் பழனியப்ப ஐயா.

அதுமட்டுமில்ல ஐயா, அமெரிக்காவும் அப்படிதான், ஐநூறு ஆண்டுகளுக்கு முன்னாடி நேட்டிவ் அமெரிக்கன்ஸ் எவ்வளவு பேர் சிரமப்பட்டாங்க உயிர் தியாகம் செஞ்சாங்க என்பதுகூட நான் படிச்சிருக்கேன். என்றான் சற்றே கவலையுடன்.

ஆமா பேராண்டி, ஒரு நாடு இன்னிக்கு தனித்துவமா இருக்குன்னா அதுக்குப் பின்னாடி நிறைய

உயிர்களின் தியாகம் இருக்கு. அவர்களின் வலிகள் இருக்கு. இத நாம மறக்கக்கூடாது.

ட்ரு என்று ஆமோதித்தான் வள்ளி.

நாடு மாதிரிதான் சமூகமும், ஒரு சமூகம் இன்னிக்கு தனித்து செயல் படுதுன்னா அதுவும் பலபேரோட வலிகளை உரமாகக் கொண்டு வளர்ந்திருக்குன்னு அர்த்தம். உனக்குத் தெரியுமா? நகரத்தார் சமூகம் இன்னிக்கு தனித்துவமா இருக்குன்னா அதுக்கு காரணமும் பலரின் வலிகளா இருந்திருக்கும். அது நமக்கு தெரியாம இருக்கலாம் ஆனா கண்டிப்பாக வலிகள் இருந்திருக்கும் முடிஞ்சா உங்க டெக்னலாஜி உதவியோடு அதைக் கண்டு எனக்கும் சொல்லுங்க நானும் தெரிஞ்சுக்கறேன், இவ்வளவு நேரம் முதிர்ச்சியாக விளக்கமளித்துக்கொண்டிருந்த ஐயா இப்போது கற்றுக்கொள்ளும் குழைந்தையானார்.

என்ன ஐயா சொல்றீங்க? என்று கேள்வி எழுப்பினான் வள்ளி.

சமீபத்தில ஒரு பதிவுல சோ.சோ.மீ ஐயா சொல்லியிருப்பார், நம்ம நகரத்தார் முன்னாடி சமண மதமாக இருந்ததாக வரலாறு சொல்லுதுன்னு, அப்படி ஒரு இனம் வேறு இனத்துக்கு மைக்ரேட் ஆகுதுன்னா அதுக்குபின்னாடி வலிநிறைந்த ஒரு வரலாறும் நிச்சயம் இருக்கும் அதைத்தான் சொல்றேன். அப்படி வந்த நகரத்தார் பழக்க வழக்கங்களை நமக்குப் புரியலை அல்லது நமக்குத் தெரியலைங்கற காரணத்துக்காக ஒதுக்கி வைக்கக்கூடாது. தெரிஞ்சுக்க முற்படனும் நம்ம இனத்தின் வளர்ச்சிக்கு நாம துணை நிக்கலைன்னாலும் நம்மால நம்ம கூட்டத்துக்கு ஒரு தலை குனிவை கொடுக்கக்கூடாது. ஐய்யாவின் வார்த்தைகளில் லயித்துக்கிடந்த வள்ளிக்கு நேரம் கடந்தது தெரியவில்லை. வெள்ளை மாருதி சுசூகி அவர்கள் வீட்டு வாசலை வந்தடைந்தது.

காலம் யாருக்காகவும் காத்திருப்பதில்லை. விடுமுறைக்கு வந்த கணேசன் குடும்பத்தார் அமேரிக்கா திரும்பும் நேரமும் வந்தது. சென்றவாரம் குலதெய்வம் கோயிலுக்குச் சென்று வந்தபின் பெரிதாக எதுவும் வெளிவேலை வைத்துக்கொள்ளவில்லை கணேசன் குடும்பத்தார். அதிக நேரம் பெரிய வளவு வீட்டிலும், ஊருக்குள் ஊரணி கோயில், கண்மாய், தோட்டம், உறவுகள் என்றே நேரத்தைச் செலவிட்டனர். இதோ வந்துவிட்டனர் சென்னை விமான நிலையத்திற்கு. பழனியப்ப செட்டியாரும் வள்ளியம்மை ஆச்சியும் மகன் வீட்டை வழியனுப்ப உடன் வந்திருந்தனர்.

வள்ளியின் அருகே சற்றே குனிந்து, வள்ளி இப்போதான் நல்ல நேரம், உங்க அப்பா அம்மாகிட்ட உன் விருப்பத்தை சொல்லப்போறேன் இந்தத் தருணத்தில் அவர்களால் என்னை தடுத்துப் பேச முடியாது, நீ அமெரிக்கப் பெண்ணைத் திருமணம் செஞ்சுக்க சம்மதம் சொல்லிடுவாங்க, என்று இயல்பாகச் சொல்லித் தன்னைத் தயார்படுத்திக்கொண்டார் பழனியப்ப ஐயா.

இத்தனை நேரம் அனலடித்துக்கொண்டிருந்த மணல் நிலத்தில் சட்டென வானிலை மாறி மழை பொழிவது போல ஐயா எதிர்பாராத செயலாக அவரது இடது உள்ளங்கையில் மென்மையான ஒரு அழுத்தத்தைத் தன் வலது கை விரல்களால் கொடுத்தான் வள்ளி. தன் இடது ஆள்காட்டி விரலை உதடுகளின்மேல் பொருத்தி ஷ்... என்று ஒலியெழுப்பி வேண்டாம் என்று சைகை செய்தான் புன்னகைத்தவாறே.

ஐயாவினால் இதனைப் புரிந்துகொள்ள இயலவில்லை, இருந்தாலும் மழையை உள்வாங்கும் நிலம் போல, வள்ளியின் செய்கைக்கு உடன்பட்டு ஏன்யா? என்று மெல்லிய குரலில் கேட்டார்.

என் திருமணத்துக்கு கோயில் மாலை வரணும் ஐயா என்று வள்ளி சொன்னபொழுது பழனியப்ப ஐயா சற்றே நிமிர்ந்து வள்ளியை நோக்கினார், அவரின் பார்வையில் கம்பீரம் இருந்தது.

வள்ளி இப்பொழுது ஐயாவிடம் கேட்டான், ஐயா என்னோட பேர் என்ன?

வள்ளி

இல்ல ஐயா, முழு பேர்?

வள்ளியப்பன்

யெஸ், தட்ஸ் மீ. ஐ லைக் இட், என்று ஐயாவிடம் கூறிவிட்டு செக்-இன் வரிசையில் நின்றுகொண்டிருக்கும் தாய் தந்தையரை நோக்கி ஆனந்த நடைபோட்டுச் சென்றான். தன் இடது கரத்தில் தந்தையின் கரத்தையும் வலது கரத்தின் தாயின் கரத்தையும் இறுகப் பற்றிக்கொண்டான் வள்ளியப்பன்.

வழியனுப்ப வந்த ஐயாவின் இருவிழிகளிலும் துளிகள் சுரந்தன. எந்த விபரமும் அறியாமல் விழிகளில் நீர்ப்பூக்க நின்றார் அப்பத்தா.

எந்த குடும்பத்தில் உள்ள பெண்மை கொண்டாடப் படவில்லையோ, அந்த வீடும் பாழ்; அந்த நாடும் பாழ்.

– சுவாமி விவேகானந்தர்

நாம் நகரத்தார் டெலிகிராம் சேனலில் இணைந்து உங்கள் மொபைலிலேயே நமது மின்னிதழை மாதமிரு முறை பெற்றிடுவீர்

t.me/naamnagarathar

Join Telegram

# கருணை மிக்க கருணைக் கிழங்கு!



மனிதர்கள் உண்ணும் உணவு வகைகளில், காய்கள் போன்ற கிழங்குகளும், தாவரங்களிலிருந்து வரும் பழங்களும் ஒரு உணவாகும். இவை நிலத்தடியில் வளர்வதால் ஊட்டச்சத்துக்கள் அதிகம்.

பொதுவாக கிழங்கு வகைகளை அதிகம் உணவில் சேர்த்து கொள்ள கூடாது என பலரும் சொல்லக் கேட்டிருப்போம். ஆனால் நம் எல்லோரும் உணவில் கட்டாயம் உணாவில் சேர்த்துக்கொள்ள வேண்டிய ஒரு கிழங்கு உண்டு என்றால் அது கருணை கிழங்கு மட்டுமே தான். நோயில் கருணை காட்டுவது கருணை கிழங்கு மிக சிறந்தது.

கருணை, அல்லது பூமி சல்லரைக்கிழங்கு (Amorphophallus paeoniifolius) என்பது பூக்கும் தாவரங்களில் சேனைக்கிழங்குகளில் ஒரு வகையாகும். இவ்வகையான தாவரங்கள் பொதுவாக வெப்பக் காடுகளில் உற்பத்தியாகும் காய்கறி வகையாகும். பசுபிக்குத் தீவுகள், தென்கிழக்காசியா, தெற்கு ஆசியா, தென்கிழக்காசியா போன்ற பகுதிகளில் அதிகமாகச் சமையலுக்குப் பயன்படுத்தப்படுகிறது. இது ஒரு பணப்பயிராக உற்பத்தி செய்யப்படுகிறது. இத்தாவரத்தின் தொடக்கம் தென்கிழக்கு ஆசியாவாகும். இந்தியா, இலங்கை, பிலிபைன்சு, மலேசியா, மற்றும் பல தென்கிழக்கு ஆசியா காடுகளில் வளருகிறது. இந்திய உணவு முறைகளில் இக்கிழங்கிற்கு முக்கிய இடம் உண்டு.



கருணைக் கிழங்கில் இரண்டு வகைகள் உண்டு. அவை.

(1) காரும் கருணை
(2) காராக் கருணை என்பவைகளாகும்.

காரும் கருணையைப் பிடிகருணை என்றும், காராக் கருணையைச் சேனைக்கிழங்கு என்றும் கூறுவர். இரண்டுமே சாப்பிடுவதற்கு உகந்தது தான். முதல் வகை பெயருக்கேற்பக் காரும் தன்மை உடையது. அது காராக் கருணையை விடக் கைக்குள் அடங்கும்படி, நீண்ட உருளை வடிவில் இருக்கும்.அந்த வகையில், நம் நாட்டில் அதிகம் உண்ணப்படும் கிழங்கான கருணைக்கிழங்குகளை சாப்பிடுவதால் என்னென்ன நன்மைகள் கிடைக்கும் என்பதை இந்தக் கட்டுரையில் தெரிந்து கொள்ளலாம். கிழங்கில் சிறந்தது கருணை என்பார்கள் பெரியவர்கள்.



இதன் மருத்துவ குணம் தெரிந்ததால்தான், அன்றைய காலங்களில் வாரத்துக்கு 3 முறையாவது இந்த கிழங்கை சமைத்துவிடுவார்களாம். சித்தா மற்றும் ஆயூர்வேதத்தில் கருணை கிழங்கின் நன்மைகள் பற்றிய ஏராளமான குறிப்புகள் இருக்கின்றன.

கருணைகிழங்கில் உள்ள சத்துகள் அனைத்தும் நமது உடலில் உள்ள பல்வேறு தேவைகளை பூர்த்தி செய்து நமது உடலின் வளர்ச்சிக்கும் மற்றும் ஆரோக்கியத்திற்கும் உதவுகிறது.

## கருணைக்கிழங்கில் உள்ள மருத்துவ குணங்கள் :

### எலும்புகள்:

நமது எலும்புகள் தான் நமது உடலின் அடித்தளம். ஒவ்வொரு மனிதனுக்கும் எலும்புகளை வலுவாக வைத்திருக்க கால்சியம் தேவைப்படுகிறது. கருணைக்கிழங்கில் எலும்பை பலப்படுத்தும் சத்துக்கள் நிறைந்துள்ளன. கருணைக் கிழங்கை வாரம் ஒருமுறை சாப்பிட்டு வந்தால் எலும்புகள் வலுவிழந்த குழந்தைகள், முதியோர்கள் வலிமை பெறுவார்கள்.

### பித்தம்:

உடலில் வாதம், பித்தம், கபம் போன்றவற்றில் பித்தம் அதிகரிப்பதால் சிலருக்கு அடிக்கடி தலைவலி, மயக்கம் போன்றவை ஏற்படும். கருணைக்கிழங்கில் பித்தத்தை சமநிலைப்படுத்தும் தன்மை அதிகம். எனவே பித்தம் சம்பந்தமான பிரச்சனை உள்ளவர்கள் கருணை கீரங்காப்பை அடிக்கடி சாப்பிட்டு வர பித்தம் நீங்கும். பித்தப்பை கற்கள் உருவாவதை தடுக்கிறது.



### பசியின்மை:

ஒவ்வொரு மனிதனும் மூன்று மணி நேரத்திற்குள் பசியை மீட்டெடுப்பது உடல் ஆரோக்கியத்தின் நல்ல அறிகுறியாகும். சிலர் சில காரணங்களால் பசியின்மைக்கு ஆளாகி, சரியாக சாப்பிட முடியாமல் தவிக்கின்றனர். கருணைக்கிழங்கு பசியின்மை பிரச்சனையை எளிதில் தீர்க்கிறது. வாரம் ஒருமுறை கருணைக்கிழங்கு சாப்பிட்டு வந்தால் வயிற்றில் அமிலச் சுரப்பை சீராக்கி, பசியின்மை பிரச்சனையும் குணமாகும்.

மாதவிடாய் பிரச்சனைகள் :

வலியுடன் கூடிய மாதவிலக்கு, அதிகப்படியான ரத்தபோக்கை தடுக்கிறது. உடலில் உள்ள அனைத்து பாகங்களுக்கும் பலத்தை தருகிறது. பெண்களின் வெள்ளைப்பாடு தொந்தரவுக்கு சிறந்த மருந்தாகவும் பயன்படுகிறது. பெண்களின் ஹார்மோன் பிரச்னைகளைக் கூட கட்டுப்படுத்தும். முக்கியமாக, 40 வயதுக்கு மேல் வரும் மெனோபாஸ் பிரச்சனையின் போது, பெண்களின் ஈஸ்ட்ரோஜன் அளவை இது அதிகப்படுத்துகிறது. உடல் எடையை குறைக்க விரும்புவர்கள், இந்த கருணைக்கிழங்கை தாராளமாக சாப்பிடலாம். குடலில் கிருமி சேராமல் தடுத்து, கொழுப்பு அதிகமாக சேர்வதை குறைக்கிறது இந்த கருணைக்கிழங்கு.

மூலம்:

மூலம் நோய்களால் அவதிப்படுபவர்களுக்கு கற்கண்டு சிறந்த இயற்கை மருத்துவ உணவாகும். மலச்சிக்கல், குடலில் உள்ள புண்கள், கருணைக்கிழங்கு தினமும் ஒரு வேளை சாப்பிட்டு வந்தால் குடல் மற்றும் ஆசனவாயில் உள்ள புண்கள் விரைவில் குணமாகும். இது நாள்பட்ட மலச்சிக்கல் பிரச்சனையையும் போக்குகிறது.

கொழுப்பு:

'குண்டுடல் கொடுக்கும் உருளைக்கிழங்கு, குண்டுடல் குறைக்கும் கருணைக்கிழங்கு' என்றே ஒரு பொன்மொழி இருக்கிறது.. அந்த அளவுக்கு கொழுப்பு சத்தை கரைக்க கூடியது அதாவது, கொழுப்பு சத்து ரத்தநாளங்களில் படிவதை கருணை கிழங்கு தடுக்கிறது... நச்சுக்களையும் வெளியேற்றும் நல்மருந்தாக இருப்பதால், உடல் எடை குறைப்பவர்களுக்கு அருமருந்தாக விளங்குகிறது. வேகவைத்து அரைத்து மசித்த கருணை கிழங்கு, ஒரு ஸ்பூன் எடுத்துக்கொண்டு, அதில் சிறிது நீர் கலந்து, சோம்பு, தனியா சேர்ந்த பொடி ஒரு ஸ்பூன் சேர்க்கவும்.



இதனுடன் சிறிது பனங்கற்கண்டு சேர்த்து கொதிக்க வைக்கவும். இதை வடிகட்டி குடித்துவந்தால், கொழுப்பு கரையும் என்கிறார்கள்.

### இதயம்:

நீண்ட ஆயுளுடன் வாழ நம் உடலின் அனைத்து பாகங்களுக்கும் இரத்தத்தை செலுத்துவதால் இதயத்தை ஆரோக்கியமாகவும் வலுவாகவும் வைத்திருப்பது முக்கியம். வாரம் மூன்று அல்லது நான்கு முறை கருணைக்கிழங்கைச் சாப்பிட்டு வருபவர்களுக்கு இதயம் ஆரோக்கியமாகி, மாரடைப்பு, இதய ரத்தக் குழாய்களில் அடைப்பு போன்றவை வராமல் நீண்ட காலம் வாழ்கின்றன.

### ஊட்டச்சத்து:

கிழங்கு வகைகள் மனிதர்களுக்குத் தேவையான பெரும்பாலான ஊட்டச்சத்துக்களை வழங்குகின்றன. நார்ச்சத்து, வைட்டமின் சி, வைட்டமின் பி, மாங்கனீசு, பொட்டாசியம், இரும்புச்சத்து, ரிபோஃப்ளேவின் போன்ற சத்துக்கள் நிறைந்த கருணா யாத்தில், இந்த சத்துக்கள் அனைத்தும் உடலின் பல்வேறு தேவைகளை பூர்த்தி செய்து, உடல் வளர்ச்சிக்கும் ஆரோக்கியத்திற்கும் உதவுகிறது.

### புற்றுநோய் :

வயிறு மற்றும் இரைப்பை புற்றுநோய் இன்று உலகளவில் மிகவும் பொதுவான புற்றுநோயாகும். கருணைக்கிழங்கு பெருங்குடல் மற்றும் செரிமான உறுப்புகளில் தேங்கியுள்ள கழிவுகள் மற்றும் நச்சுக்களை வெளியேற்றி புற்றுநோய் செல்கள் வளராமல் தடுக்கிறது. எனவே, வயிறு மற்றும் இரைப்பை புற்றுநோய் ஏற்படுவதைத் தடுக்க, உங்கள் உணவில் அதிக அளவு கருணைக்கிழங்கு சாப்பிட வேண்டும்.

### அஜீரணம் :

நமது உடலின் செரிமானத் திறன் சீராக இருந்தால் பெரும்பாலான நோய்கள் வராமல் தடுக்கலாம். சிலருக்கு உண்ணும் உணவு சரியாக ஜீரணமாகாத நிலை ஏற்படும். ஜீரணக் கோளாறுகள், மலச்சிக்கல், வாயுத் தொல்லை மற்றும் வயிறு தொடர்பான பிற பிரச்சனைகளைத் தீர்க்கும் திறன் கொண்ட இயற்கை உணவாகும். எனவே இந்த கிழங்கை தொடர்ந்து சாப்பிட்டு வருபவர்களுக்கு மேற்கூறிய பிரச்சனைகள் அனைத்தும் விரைவில் நீங்கும்.

### ஆஸ்துமா:

ஆனால், ஆஸ்துமா இருப்பவர்கள் இந்த கிழங்கை தவிர்க்க வேண்டும்.. காரணம், கருணைக்கிழங்கு, உடலை குளிரச் செய்யும் உணவாகும்.. அதேபோல, சர்க்கரை நோயாளிகள், இதய பாதிப்பு உள்ளவர்கள், ரத்த அழுத்தம் உள்ளவர்கள் கிழங்குகள் சாப்பிடுவதில் கவனமாக இருக்க வேண்டியது அவசியம்.. டாக்டர்களிடம் ஆலோசனை பெற்று, அதற்கேற்றபடி கிழங்குகளை சாப்பிடுவது நல்லது.. ஒவ்வாமை இருப்பவர்களும் டாக்டரை அணுகி ஆலோசனை பெற்றுக்கொள்வது நல்லது.

### எப்படி சமைக்க வேண்டும்:

கருணையின் தோலை சீவும்போதே, கைகளில் நமைச்சலை தரக்கூடியது.. கருணைக்கிழங்கு நறுக்குவதற்கு முன்பு, கைகளில் எண்ணெய்யை தடவிக்கொண்டு சீவ வேண்டும் என்கிறார்கள். மேலும், இந்த கிழங்கை நன்றாக வேக வைத்து, தோலை உரித்து, பிறகு, புளி சேர்த்து சமைத்தால், அதிலுள்ள காரல் நீங்கிவிடும்.. அரிப்பும் இருக்காது... அல்லது அரிசி கழுவிய நீரில், கருணைக்கிழங்கை வேக வைத்தாலும், நமைச்சல் கட்டுப்படும். இந்த கிழங்கை சமைக்கும்போது, புளிக்கு பதிலாக சிலர் மோர் பயன்படுத்துவார்கள்.

அனைத்து விதமான நோய்களில் இருந்தும் கருணைக்கிழங்கு காக்க வல்லது என்பதால்தான், இதனை கருணைக் கிழங்கு என்கிறோம். எனவே, விலக்கிவைத்துவிட வேண்டாம்.



## சிந்தனை துளிகள்...

- கவலையை தீர்க்க வேண்டும் என்றால்.. அதன் ஆணி வேரை கண்டுபிடிக்க வேண்டும்.!

- பேச வேண்டிய நேரத்தில் மட்டும் பேசினால்.. உங்கள் வாழ்க்கை இனிமையாக இருக்கும்.!

- தன்னம்பிக்கை இருந்தால் தான்.. குறுகிய வட்டத்தில் இருந்து வெளியில் வந்து மகிழ்ச்சியாக வாழ முடியும்.

- சவால்களை தைரியமாக எதிர்கொண்டால் மனம் உறுதி அடையும்.

- ஒவ்வொரு வலியும் உங்களை வலிமை ஆக்குகிறது என்பதை எப்போதும் நியாபகம் வைத்துக் கொள்ளுங்கள்.! உங்களுக்குள் இருக்கும் மன தடைகளை நீக்கினால்..

- உங்கள் முன் இருக்கும் பல வாய்ப்புக்கள் தெளிவாக தெரியும். எண்ணங்களை சரியாக கையாளும் கலையை பெற்றால்.. ஆசைப்படும் வாழ்க்கையை உருவாக்க முடியும்.!





# பணம் சம்பாதிப்போம் பங்குச் சந்தையில்...

க .ஹர்ஷவர்த்தினிஸ்ரீ (நெற்குப்பை) நகரத்தார்கேப்பிட்டல் சென்னை

நமது நாம் நகரத்தார் மின்னிதழ் வாசகர்கள் பயன் பெறும் வகையில் சென்னை நகரத்தார் கேப்பிட்டல் நிபுணர் ஹர்ஷவர்த்தினிஸ்ரீ ( நெற்குப்பை ) எழுதும் இந்த தொடரில் பங்குசந்தை தொடர்பான அடிப்படைகளையும் , ஒவ்வொரு மாதமும் ஒரு குறிப்பிட்ட பங்கின் பகுப்பாய்வினையையும், குறுகிய கால பங்குகளுக்கான பரிந்துரைகளையும் பார்க்கலாம் .

இந்த இதழில் ஒரு நிறுவனத்தைபற்றிய விரிவான பகுத்தாய்வு.

Patel
Since 1949
Patel Engineering Ltd.,

## இந்நிறுவனத்தைப் பற்றி:

1949 இல் நிறுவப்பட்ட பட்டேல் இன்ஜினியரிங் லிமிடெட், இந்தியாவில் உள்ள ஒருங்கிணைந்த உள் கட்டமைப்பு மற்றும் கட்டுமான சேவை நிறுவனங்களில் ஒன்றாகும். அணைகள், சுரங்கப் பாதைகள், மைக்ரோ–ரன்னல்கள், நீர் மின் திட்டங்கள், நீர்ப் பாசனத் திட்டங்கள், நெடுஞ்சாலைகள், சாலைகள், பாலங்கள், இரயில்வே, சுத்திகரிப்பு ஆலைகள் முதல் ரியல் எஸ்டேட் கள் மற்றும் டவுன்ஷிப்கள் வரை உள் கட்டமைப்புத் துறையின் அனைத்துத் துறைகளையும் கையாண்டு வருகிறது.

தங்கள் வாடிக்கையாளர்களுக்கு அவர்களின் மிகவும் சிக்கலான கட்டுமான சவால்களுக்கு நம்பகமான தீர்வுகளை வழங்கி வருகிறது. இந்நிறுவனம் பாரம்பரிய கட்டுமான முறைகள், அதிநவீன தொழில் நுட்பங்களை பயன்படுத்தி விநியோக அமைப்புகளுக்கான புதிய அணுகுமுறைகளை கையாண்டு வருகிறது. இந்நிறுவனம் தங்கள் வாடிக்கையாளர்களுக்கு, திட்டத்தின் தொடக்கத்தில் இருந்து முழு செயல்பாட்டு வசதியை தொடங்குவதற்கு உறுதுணையாக இருந்து வருகிறது. உள்ளூர் அலுவலகங்களின் நெட்வொர்க்கை கொண்டு தங்கள் வாடிக்கையாளர்களுக்கு வலுவான உள்ளூர் இருப்பு மற்றும் பரந்த புவியியல் அணுகல் ஆகியவற்றின் இரட்டை நன்மைகளை வழங்குகிறது. வளர்ந்து வரும் தொழில்நுட்ப உதவியுடன், தங்கள் வாடிக்கையாளர்களுக்கு நிரந்தர தீர்வுகளை வழங்கி வருகிறது.

அரசு சார்ந்த மற்றும் அரசு சாரா நிறுவனங்களுக்கு தன் திட்டங்களை செயல்படுத்தி, தன் பொருளாதார நிலையை உயர்த்திக் கொண்டுள்ளது.

இந்நிறுவனம் ஒவ்வொரு திட்டத்தையும், புவியியல் அளவீடு மற்றும் பிற தொடர்புடைய துறைகளில் உள்ள பல்வேறு நிபுணர்களின் அனுபவத்தை கொண்டு திறம் பட செயலாற்றி வருகிறது. இந்நிறுவனம் துணை ஒப்பந்ததாரர்கள் துணைக் கொண்டு 250க்கும் மேற்பட்ட திட்டங்களை வெற்றிகரமாக முடித்துள்ளது.

இந்நிறுவனம் பல IMS சான்றிதழ்களை பெற்றுள்ளது.

1. ISO 9001: 2008 தர மேலாண்மை அமைப்பு

2. ISO 14001: 2004 சுற்றுச்சூழல் மேலாண்மை அமைப்பு

3. OHSAS 18001: 2007 தொழில், உடல் நலம் மற்றும் பாதுகாப்பு மேலாண்மை அமைப்பு.

இந்நிறுவனம் ஒரு பொது நிறுவனமாகும். இந்நிறுவனத்தின் பங்குகள் மும்பை மற்றும் தேசிய பங்குச் சந்தைகளில் வர்த்தகம் செய்ய பட்டு வருகிறது.

## இந்நிறுவனத்தின் திட்டங்கள் :

1. கமெங் நீர் மின் திட்டம்

## தொழில்நுட்ப விவரங்கள்:

ஆற்றை திசை திருப்பும் குடிமைப் பணிகள் -2 slui உளவி (நீளம் 149.5 மீ & உயரம் 6மீ.

நிச்சயம் அணையின் கான்கிரீட் புவியீர்ப்பு வகை 69மீ உயரம் மற்றும் நீளம் 264.15மீ.

நிலத்தின் கீழ் உள்வாங்கும் கட்டமைப்பு நீளம் 67.47மீ

இத்திட்டத்தின் வாடிக்கையாளர் நீப்கோ ஆகும். இடம் அருணாசலப் பிரதேசம்.

## சிறப்பம்சங்கள்:

4.4 கிமீ நீளமுள்ள ஹெட் ரேஸ் டன்னல் அகழாய்வு முடிந்தது. 2 மதகுகள் கட்டும் பணி முடிந்துள்ளது.

2. காட்கர்நீர் மின் திட்டம்

## தொழில்நுட்ப விவரங்கள்:

மேல் அணையின் உயரம் 15.16மீ, நீளம் 503மீ.ஸ்பில்வே: ஓகிவகை, நீளம் 70.8மீ.

கீழ் அணை உயரம் 86.14மீ, நீளம் 89மீ

சேலம் அணை உயரம் 7.5மீ, நீளம் 292மீ .அழுத்தம் தண்டு நீளம் 696மீ

பவர் ஹவுஸ் 250Mw மெஷின் ஹால் 123m X 23.40m X 46.80m

ட்ரான்ஸ் பார்மர் ஹால் 81.35m X 20m X 26m

இத்திட்டத்தின் வாடிக்கையாளர் மஹாராஷ்டிரா அரசு.

ஆசியாவின் முதல் RCC அணை இத்திட்டத்தின் சிறப்பு அம்சம் ஆகும்.

3. வாரணாசி – சக்தி நகர் சாலை

## திட்ட கண்ணோட்டம்:

டிபிஎஃப்ஓடி அடிப்படையில் உத்திரபிரதேச மாநிலத்தில் SH-5A இன் வாரணாசி - சக்தி நகர் சாலையின் four lane with paved shoulder 0.00கிமீ முதல் 117.65 கிமீ வரை.

## இத்திட்டத்தின் தொழில் நுட்ப விவரங்கள்:

நீளம்: 115 கிமீ

வகை: நெகிழ்வான நடைப் பாதை

நான்கு லேன் வண்டிப் பாதை: 76கிமீ

நான்கு லேன் பைபாஸ்: 6 கிமீ

ஆறு லேன் கேரேஜ்வே: 33கிமீ

சர்வீஸ் சாலை: 27கிமீ

இத்திட்டத்தின் வாடிக்கையாளர் உத்திரபிரதேச மாநில நெடுஞ்சாலை ஆணையம்.

## இந்நிறுவனத்தின் பிற திட்டங்கள்

ராம்பூர் நீர் மின் திட்டம்

நர்மதா நீர் மின் திட்டம்

இராய்ச்சூர் ஷோலாப்பூர் டிரான்ஸ்மிஷன் லைன் திட்டம்

சவ்ரா குடு நீர் மின் திட்டம்

இன்னும் பிற திட்டங்களை தன் வசம் வைத்துள்ளது.

## நிறுவனத்தின் அடிப்படை விவரங்கள்:

சந்தை மூலதனம் ரூபாய் 4974.36 கோடி

முக மதிப்பு ரூபாய் 1

புத்தக மதிப்பு ரூபாய் 39.2

PE விகிதம் 22.24

ROCE 13.7%

ROE 6.09%

Debt to Equity .6

EPS 2.55

**Patel Eng Share Price Insights** VIEW ALL

- Beating 3 Yr Revenue CAGR
- Stock Screener Highlights
- Employee & Interest Expense
- Patel Eng Share Price Update

**Key Metrics**

| | |
|---|---|
| PE Ratio (x)<br>25.24 | EPS - TTM (₹)<br>2.55 |
| MCap (₹ Cr.)<br>4,974.36 | Sectoral MCap Rank<br>11 |
| PB Ratio (x)<br>1.56 | Div Yield (%)<br>0.00 |
| Face Value (₹)<br>1.00 | Beta<br>4.96 |
| VWAP (₹)<br>64.15 | 52W H/L (₹)<br>69.70 / 13.15 |

**Patel Eng Share Price Returns**

| | |
|---|---|
| 1 Day | ↑0.31% |
| 1 Week | ↑6.9% |
| 1 Month | ↑21.09% |
| 3 Months | ↑22.36% |
| 1 Year | ↑237.53% |
| 3 Years | ↑338.91% |
| 5 Years | ↑71.7% |

இந்நிறுவனத்தின் விற்பனையானது கடந்த நிதி ஆண்டில்( மார்ச் 2022) இல் ரூபாய் 3030 கோடி ஆகும். தற்போதைய நிதி ஆண்டில் 26% உயர்ந்து ரூபாய் 3817 கோடியை ஈட்டியுள்ளது. வீவீனி (Trailing 12 months) விற்பனையானது ரூபாய் 4224 கோடியாக உள்ளது. இது இந்த நிதி ஆண்டில் நல்ல வளர்ச்சியை அடைய முடியும் என்று உறுதி கூறலாம்.

வரிக்கு முந்தைய வருவாய் ரூபாய் 88 கோடியில் இருந்து ரூபாய் 198 கோடியை ஈட்டியுள்ளது.

வரிக்கு பிந்தைய வருவாய் ரூபாய் 56 கோடியில் இருந்து 156 கோடியாக உயர்ந்துள்ளது. நிறுவனத்தின் EPS .77 இல் இருந்து ரூபாய் 2ஆக உயர்ந்துள்ளது.

விற்பனை மற்றும் வருவாய் கணிசமான வளர்ச்சியை அடைந்தபோதிலும், FIIS மற்றும் DIIS தங்களுடைய இருப்பை மிக குறைந்த அளவில் குறைத்துள்ளது கவனிக்க படவேண்டிய ஒன்றாகும்.

இந்நிறுவனத்தின் கடன் கணிசமாக குறைந்து, மேலும் அதன் இருப்பு கணிசமாக உயர்ந்து வருவது இந்நிறுவனத்தின் வளர்ச்சியை உறுதி செய்கிறது.

## நிறுவனத்தின் நிதி நிலை:

INCOME (P&L) | BALANCE SHEET | CASH FLOW | RATIOS — CONSOLIDATED

**INSIGHTS**

**Beating 3 Yr Revenue CAGR**
Company's annual revenue growth of 23.62% outperformed its 3 year CAGR of 15.56%. (Source: Consolidated Financials)

**Employee & Interest Expense**
Company has spent 9.96% of its operating revenues towards interest expenses and 8.11% towards employee cost in the year ending 31 Mar, 2023. (Source: Consolidated Financials)

| QUARTERLY \| ANNUAL | SEP 2023 | JUN 2023 | MAR 2023 | DEC 2022 | SEP 2022 |
|---|---|---|---|---|---|
| Total Income | 1,046.10 | 1,136.43 | 1,326.19 | 1,063.75 | 922.95 |
| Total Income Growth (%) | ↓-7.95 | ↓-14.31 | 24.67 | ↑15.26 | ↓-8.57 |
| Total Expenses | 905.34 | 964.16 | 1,134.59 | 903.96 | 786.55 |
| Total Expenses Growth (%) | ↓-6.10 | ↓-15.02 | 25.51 | ↑14.93 | -7.04 |
| EBIT | 140.76 | 172.27 | 191.60 | 159.79 | 136.40 |
| EBIT Growth (%) | -18.29 | -10.09 | ↑19.91 | 17.15 | -16.48 |
| Profit after Tax (PAT) | 37.66 | 43.40 | 84.81 | 31.19 | 26.15 |
| PAT Growth (%) | ↓-13.24 | ↓-48.82 | ↑171.91 | ↑19.27 | -36.74 |
| EBIT Margin (%) | 13.46 | 15.16 | 14.45 | 15.02 | 14.78 |
| Net Profit Margin (%) | 3.60 | 3.82 | 6.39 | 2.93 | 2.83 |
| Basic EPS (₹) | 0.46 | 0.51 | 1.56 | 0.62 | 0.53 |

INCOME (P&L) | BALANCE SHEET | CASH FLOW | RATIOS — CONSOLIDATED

| ANNUAL | FY 2023 | FY 2022 | FY 2021 | FY 2020 | FY 2019 |
|---|---|---|---|---|---|
| Total Assets | 8,749.98 | 8,510.14 | 8,087.10 | 8,328.27 | 8,200.59 |
| Total Assets Growth (%) | ↑2.82 | ↑5.23 | ↓-2.90 | ↑1.56 | ↑10.60 |
| Total Liabilities | 5,774.20 | 6,055.09 | 5,706.25 | 5,748.18 | 5,867.28 |
| Total Liabilities Growth (%) | ↓-4.64 | ↑6.11 | ↓-0.73 | ↓-2.03 | ↑12.86 |
| Total Equity | 2,975.78 | 2,455.05 | 2,364.19 | 2,563.42 | 2,333.31 |
| Total Equity Growth (%) | ↑21.21 | ↑3.84 | ↓-7.77 | ↑9.86 | ↑5.31 |
| Current Ratio (x) | 1.46 | 1.41 | 1.46 | 1.24 | 1.27 |
| Total Debt to Equity (x) | 0.61 | 0.95 | 0.97 | 0.89 | 1.16 |
| Contingent Liabilities | 0.00 | 2,879.55 | 2,986.39 | 2,297.67 | 2,497.27 |

*All figures in Rs Cr, unless mentioned otherwise*

View Details ▸

INCOME (P&L) | BALANCE SHEET | CASH FLOW | RATIOS — CONSOLIDATED

**INSIGHTS**

**Increase in Cash from Investing**

Company has used Rs 217.29 cr for investing activities which is an YoY increase of 51.16%. (Source: Consolidated Financials)

| ANNUAL | FY 2023 | FY 2022 | FY 2021 | FY 2020 | FY 2019 |
|---|---|---|---|---|---|
| Net Cash flow from Operating Activities | 692.57 | 537.32 | 388.70 | 407.32 | 835.69 |
| Net Cash used in Investing Activities | -217.29 | -143.75 | 6.88 | -47.42 | -327.44 |
| Net Cash flow from Financing Activities | -535.51 | -339.79 | -310.77 | -366.70 | -512.71 |
| Net Cash Flow | -60.22 | 53.79 | 84.81 | -6.81 | -4.45 |
| Closing Cash & Cash Equivalent | 211.23 | 248.71 | 198.06 | 117.67 | 127.18 |
| Closing Cash & Cash Equivalent Growth (%) | ↓-15.07 | ↑25.57 | ↑68.32 | ↓-7.48 | ↓-2.75 |
| Total Debt/ CFO (x) | 2.56 | 4.21 | 5.75 | 5.51 | 3.17 |

INCOME (P&L) | BALANCE SHEET | CASH FLOW | RATIOS — CONSOLIDATED

| ANNUAL | FY 2023 | FY 2022 | FY 2021 | FY 2020 | FY 2019 |
|---|---|---|---|---|---|
| Return on Equity (%) | 6.35 | 3.01 | -12.62 | 0.43 | 6.77 |
| Return on Capital Employed (%) | 13.14 | 11.94 | 5.93 | 6.72 | 10.90 |
| Return on Assets (%) | 2.09 | 0.84 | -3.59 | 0.13 | 1.87 |
| Interest Coverage Ratio (x) | 1.78 | 1.53 | 0.68 | 1.09 | 1.30 |
| Asset Turnover Ratio (x) | 0.50 | 0.38 | 24.66 | 31.42 | 28.80 |
| Price to Earnings (x) | 6.32 | 16.50 | -1.88 | 33.00 | 2.71 |
| Price to Book (x) | 0.40 | 0.50 | 0.24 | 0.15 | 0.18 |
| EV/EBITDA (x) | 3.76 | 5.06 | 7.70 | 7.10 | 5.66 |
| EBITDA Margin (%) | 17.73 | 19.04 | 17.23 | 13.62 | 22.43 |

## மேம்பட்ட விளக்கப்படம்:

BUY / SELL SIGNALS | PRICE ANALYSIS | PIVOT LEVELS & ATR | CHART




## சகநிறுவன ஒப்பீடு:

### Peer Comparison

PATEL ENG STOCK PERFORMANCE | RATIO PERFORMANCE | CHART | TABLE

Patel Eng | Man Infracons × | Dilip Buildcon × | Ramky Infra × | Search by Stock

1D 1W 1M 3M 6M 1Y 5Y



### Peer Comparison

PATEL ENG STOCK PERFORMANCE | RATIO PERFORMANCE | SEE ALL PARAMETERS


| NAME | | P/E (X) | P/B (X) | ROE % | ROA % | REV CAGR [3YR] | OPM |
|---|---|---|---|---|---|---|---|
| Patel Eng | | 25.24 | 1.67 | 6.35 | 2.09 | 15.56 | 15.51 |
| Man Infracons | × | 25.08 | 7.10 | 23.73 | 14.51 | 86.29 | 23.83 |
| Dilip Buildcon | × | 46.77 | 1.44 | 0.02 | 0.00 | 3.11 | 5.88 |
| Ramky Infra | × | 4.26 | 3.57 | 80.79 | 24.52 | 6.20 | 26.84 |
| Ahluwalia Contr | × | 23.78 | 4.30 | 15.79 | 7.77 | 14.65 | 10.38 |

Add More

## ஷேர்ஹோல்டிங் பேட்டர்ன்:

### Patel Eng Shareholding Pattern

QOQ CHANGE | TOTAL SHAREHOLDINGS





*Showing Shareholding as on 30 Sep 2023*

| CATEGORY | NO. OF SHARES | PERCENTAGE | % CHANGE QOQ |
|---|---|---|---|
| Promoters | 30,49,17,712 | 39.41 % | 0.00 |
| Pledge | 27,03,63,109 | 88.67 % | 0.00 |
| FII | 1,82,65,677 | 2.36 % | -0.02 |
| DII | 28,02,957 | 0.36 % | -0.02 |
| Others | 44,76,30,882 | 57.87 % | +0.04 |

## Patel Eng Shareholding Pattern

QOQ CHANGE    TOTAL SHAREHOLDINGS



Showing Patel Eng Shareholding as on 30 Sep 2023

| CATEGORY | 30 SEP 2023 | 30 JUN 2023 | 31 MAR 2023 | 31 DEC 2022 |
|---|---|---|---|---|
| Promoters | 39.41 | 39.41 | 39.41 | 39.12 |
| Pledge | 88.67 | 88.67 | 88.67 | 99.32 |
| FII | 2.36 | 2.38 | 2.10 | 2.92 |
| DII | 0.36 | 0.38 | 0.33 | 0.50 |
| Mutual Funds | 0.00 | 0.00 | 0.00 | 0.00 |
| Others | 57.87 | 57.83 | 58.16 | 57.46 |

## எமது பரிந்துரை:

நீண்ட கால அடிப்படையில் இந்நிறுவனத்தின் பங்குகளை தற்போதைய சந்தை விலையான ரூபாய் 60 மற்றும் குறையும் தருவாயில் ரூபாய் 40 வரை வாங்கலாம். இலக்கு ரூபாய் 100 – 120 – 160+++

## இந்த மாத குறுகிய கால பங்குகள் பரிந்துரைகள்:

1. Indian Energy Exchange Ltd... Entry 160. Accumulate more till 120. Target 200,220 and 240

2. Godrej Consumer Products Limited... Entry 1100. Accumulate more till 900. Target 1400,1500 and 1600

3. Sona Blw Precision Forgings Ltd... Entry 640. Accumulate more till 500. Target 800,880 and 940

4. HFCL Ltd... Entry 84. Accumulate more till 70. Target 110,130 and 150.

5. Greaves Cotton Ltd... Entry 150. Accumulate more till 100. Target 180,200 and 220

6. Oil India... Entry 370. Accumulate more till 300. Target 440, 470 and 500

## பொறுப்புத் துறப்பு

கட்டுரையாளர் செபியில் பதிவு செய்யப்பட்ட ஆய்வாளர் அல்ல. இடுகையிடப்பட்ட விளக்கங்கள் / நிலைகள் / பங்குகள் தனிப்பட்ட ஆய்வு. இந்தப் பட்டியல் முற்றிலும் ஆய்வுப் பகிர்வுக்காகவே, வாங்கவோ விற்கவோ எந்தப் பரிந்துரையும் இல்லை. தனிநபர் உங்கள் சொந்த விருப்பத்தின்படி முடிவு எடுக்க வேண்டும் யாரேனும் சுயமாக எந்த ஒரு வர்த்தக நடவடிக்கையையும் மேற்கொண்டால், எந்தவிதமான இழப்புகளுக்கும் லாபத்திற்கும் கட்டுரையாளர் / நாம்நகரத்தார் மின்னிதழோ பொறுப்பல்ல..!! இது முற்றிலும் ஒருவரின் சொந்த நடவடிக்கை மற்றும் விருப்பம். எந்த விதமான சட்ட நடவடிக்கைகளும் ஏற்றுக்கொள்ளப்படாது

முதல் முயற்சியில் வெற்றி பெறுபவன்
**அதிர்ஷ்டசாலி!**

2வது முயற்சியில் வெற்றி பெறுபவன்
**புத்திசாலி!**

3வது முயற்சியில் வெற்றி பெறுபவன்
**அனுபவசாலி!**

4வது முயற்சியில் வெற்றி பெறுபவன்
**தைரியசாலி!**

வெற்றி பெறும் வரை முயற்சி செய்பவன்
**சாதனையாளன்!**



# NAGARATHAAR KAPITAL

**Webinar Course.**
**Stock Market Course (Beginners).**
**Basics, Fundamentals, Technical (Introduction)**
**Stock Market Course (Advanced).**
**Technical, Strategies**

**Why One Wealth Course?**
**Learn from Qualified and Experienced Expert Panelists**
**Your search for in-depth Knowledge ends here.**
**You will become a Professional trader and Informed Investor**
**Got Learn about Different Market**

**Who can join?**

I. Students.
II. Professionals from other sectors who want to become Part time and Full time Trader.
III. Professionals from other sectors who want to formulate their Portfolio. House Wife.
IV. Anyone who wants to make a career in Equity / Commodity / Currency Trading / to become Investment Advisor / to become Financial Advisors.

**Our "Young generation" can learn and start doing analysis and entering in potential stock @ Correct Entry / CorrectExit to win the Trade and Investment in turn around stocks to create wealth by their own in reasonable period of time.**


**Webinar Dates** Every month will post it on our NAGARATHAAR KAPITAL Forum
This month Class will be on Friday 19 January 2024.

**Webinar Timings** India Time: 17:30Hrs-18.30Hrs In-Week days & 17.00Hrs-18.00Hrs Week Ends.

# For further Details Contact: +91-9790755337 +91-9884072224

nagarathar.capital@gmail.com

# மழலை மழைத்துளிகள்..!!!



கல்லல்
மீ.மணிகண்டன்
Texas, USA

குழந்தைகளுக்காக எழுதப் பட்டாலும் அனைவருக்குமான கவிதைகளின் அணிவரிசை. தனது தாய்மொழியை ராகத்தோடு பாடிப் பயில்வது சிறுவர்களுக்கு உற்சாகத்தைக் கொடுக்கும் என்பதோடு பல குழந்தைகள் பயின்று சிறப்படையவும் தமிழ் மொழிக்குப் பெருமைசேர்க்கவும் தொடரும் மழலை மழைத்துளிகள்

## வணக்கம் புத்தாண்டே




வணக்கம் சொல்வோம் புத்தாண்டே
… வாழ்த்துச் சொல்வாய் புத்தாண்டே
மணக்கும் சொந்தம் நட்புகளும்
… மனைக்கு அழைப்போம் புத்தாண்டே
அணிந்தே மாதம் பன்னிரெண்டை
… அழகாய் வருவாய் புத்தாண்டே
இணைந்தே மனிதர் எல்லோரும்
… இன்புற வரங்கொடு புத்தாண்டே!

## தை தை

தையும் வந்தது தாளமிடு
… தைதை எனவே நடனமிடு
கையில் கரும்பைப் பிடித்துவிடு
… காலைக் கதிரை வணங்கிவிடு
வையம் சிறக்க உழுபவரை
… வணங்கித் தொழவே மண்டியிடு
செய்யும் தொழிலில் மனத்தோடு
… சேர்ந்து செயல்படு உண்மையொடு!





# சிறுவாபுரி நகரவிடுதி மாதந்திர கிருத்திகை வழிபாடு



நமது சிறுவாபுரி நகர விடுதியில் கார்த்திகை மாத கிருத்திகை 26/11/2023 ஞாயிறுக்கிழமைஅன்று நடைபெற்றது. அன்றைய தினம் காலை 7 மணிக்கு வேலுக்கு அபிஷேகமும் மதியம் 12 மணிக்கு மஹா தீபாராதனையும் நடைபெற்றது.

பக்தர்கள் திரளாக கலந்த இந்த நிகழ்வில் காலை மற்றும் மதியம் அன்னதானம் உபயதாரர்கள் வேந்தன்பட்டி திரு.M.ராமுரத்தினம் செட்டியார் குடும்பத்தினர் , திருமதி. L.ஜானகி ஆச்சி, திரு.சிந்தாமணி-ராமநாதன் பனையப்பட்டி, பலவான்குடி திரு.M.வள்ளியப்பன் செட்டியார் குடும்பத்தினர் மற்றும் ஓ.சிறுவயல். திரு. PR. வெங்கடேஷ் குடும்பத்தினர் சார்பில் நடைபெற்றது.

வழிபாடு ஏற்பாடுகளை நகரத்தார் சிறுவாபுரி பாதயாத்திரை டிரஸ்ட் குழுவினர் செய்திருந்தனர்.

நகரத்தார் பெருமக்கள் சிறுவாபுரி மாத கிருத்திகை வழிபாட்டு அன்னதான நிகழ்வில் பங்கு கொள்ள பின்வரும் நகரத்தார் சிறுவாபுரி பாதயாத்திரை டிரஸ்ட் அமைப்பின் அங்கத்தினர்களை தொடர்பு கொள்ளலாம்.

திரு.SP சிதம்பரம் புரவலர் (9444274720)
திரு.K.சிதம்பரம் தலைவர் (9080264411)
திரு.PR.மீனாட்சிசுந்தரம் செயலாளர் (9444183688)
திரு.முத்தையா சம்பத் பொருளாளர் (9710066980)



# நீங்கள் எப்படி... மேஷ லகினம்..!

ஜோதிடர் எல்லி

நாம் நகரத்தார் மின்னிதழில் பயணிக்கும் வாசகர்கள் அனைவருக்கும் அன்பு வணக்கங்கள்..!!! . ஆங்கில புத்தாண்டும், பொங்கல் திருநாளும் தங்கள் வாழ்வில் மகிழ்ச்சி யையும் மன நிம்மதியை யும் நிரப்ப இந்த பிரபஞ்சத்தை வேண்டுகிறேன்!

இதுவரை பல்வேறு ஜோதிட தலைப்புகளின் கீழ் தொடர்ந்து ஜோதிடம் குறித்து பல்வேறு தகவல்கள் அறிந்து கொண்டோம்.

இனி வரும் இதழ்களில் இனி வரும் இதழ்களில் 12 லக்கினகாரர்களின் வாழ்வியல் பற்றி அறிவோம்

ஒருவருக்கு ஜாதகத்தில் கிரகங்கள் எப்படி அமைந்தாலும் அவரின் லக்கினம் பொறுத்தே அவைகள் வெளிப்படும். உடலில் தலையில்லைனா மற்ற எந்த பாகம் இருந்தாலும் பயன் தருமா ?

நம் உடலை இயக்குவது மூளைதான் அந்த மூளை பாதுகாப்பாக இருப்பது தலைக்குள் .ஜாதகத்தில் லக்னமே தலையாயது கர்வம், அகங்காரம் இவற்றை தலைக்கனம் என்கிறோம். ஆக தலையும் தலைமையும் முக்கியம்!

முதலில் மேச லக்னகார்களின் குணாதிசயங்கள், செயல்பாடுகள் எப்படி இருக்கும்





என்பதை இந்த இதழில் பார்க்கலாம்!. ஜோதிட சாஸ்திரத்தை எடுத்து கொண்டாமானால் அதன் காலப்புருஷ தத்துவத்தின் படி மேஷ ராசியே முதல் பாவகம் எனும் தலை ஆகிறது. மனித உடலில் தலையை குறிக்கும் ராசி மேஷம்!


சூரிய பகவான் உச்சமும் சனி பகவான் நீசம் பெறும் இடமும் இதுவே போர்க்காரகன் செவ்வாய் இங்கு ஆட்சி பெறுகிறார். எனவே மேஷ லக்னகார்கள் தலைமையை விரும்புவார்கள், ஆளுமை எண்ணம் கொண்டவர்கள், போராட்ட குணம் உடையவர்கள்.

வெற்றி பெற கடுமையாக உழைப்பவர்கள் அதனை சூட்சுமமாக இல்லாமல் வெளிப்படையாக களத்தில் செய்து காண்பிப்பவர்கள். இதுவே சில நேரங்களில் இவர்களுக்கு பின்னடைவை கொடுக்கலாம்.இவர்களுக்கு முன் கோபம் அதிகம் உண்டு! எளிதில் எவருக்கும் கட்டுபட மாட்டார்கள!

தலைமையை கைப்பற்றும் எண்ணம் எப்போதும் இருக்கும். பிறரிடம் பொறுப்பை கொடுக்காமல் தாமாகவே முன் நின்று செய்வார்கள். சரியான வழிகாட்டுதல்



இல்லாமல் போனால் இவர்கள் தடுமாற்றம் ஆவதுண்டு.



இவர்கள் தந்தையாருடன் ஒத்து போக மாட்டார்கள். பாக்கியாதிபதி குருவே விரய ஸ்தானாதிபதியாகவும் வருவதால் தந்தையார் சொத்துக்கள் சுப விரயம் ஆகும் நிலை உண்டாகலாம். லக்னாதிபதி செவ்வாய் எட்டாம் வீட்டின் ஆதிபத்தியம் பெறுவதால் அவர் நேரிடையாக வலுப்பெறும் போது அவமானங்களை ஜாதகரே வலிய இழுத்து கொண்டு அவதிப்படும் நிலை ஏற்படும்.



செவ்வாயின் அசுப வலு ஜாதகரை விவேகமற்ற முரட்டு மனிதராக செய்துவிடும். காதலில் ஆர்வம் மிக்கவர்களாக இருப்பார்கள்! நண்பர்கள் அதிகம் உண்டு, ஆனாலும் நட்பு என்பது நிலையற்ற தன்மை கொண்டதாக அமைந்து விடுகிறது. பழைய நட்புகள் விலகும் போது புதிய நட்பு சுற்றங்களை உருவாக்கி கொள்வார்கள். நண்பர்களை நன்கு உபயோகபடுத்தி கொள்ளும் திறமையும் உள்ளவர்கள்.

அரசியல் ஆர்வம் இவர்களுக்கு தவிர்க்க முடியாத ஒன்று. அரசு பணிகளில் இருந்தாலும் சங்க ஈடுபாடு, போராட்டம் இவைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பார்கள்.

உள்ளூரிலேயே வேலை கிடைப்பது அரிது, அப்படி கிடைத்தாலும் அது சார்ந்து அதிக பயணங்கள்,

அலைச்சல்கள் ஏற்பட்டு விடுகிறது.பணிச்சுமை அதிகமாக இருக்கும். சதா காலமும் வேலையை பற்றிய சிந்தனை உண்டாகிறது. சனி பகவான் பாதகாதிபதியாகயும் 11ம் அதிபதியாகவும் வருவதால் பெரும்பாலும் மூத்த சகோதரர் மூலமாக ஆதாயமோ உதவியோ எதிர்பார்க்க இயலாது.பொதுவாக ஏக புத்திர ஜாதகர்கள் இவர்கள்.பல மேஷ லக்ன ஜாதகர்களுக்கு ஒரே ஒரு ஆண் குழந்தை மட்டுமே அமைகிறது. வாழ்க்கை துணையை தேடி வெகு தொலைவு போகவேண்டியதில்லை அருகாமையிலோ அல்லது அதிக பட்சமாக 50 கிமீ தூரத்தில் அமைந்து விடும் .

முரட்டு மனிதர்களாக காணப்படும் மேஷ லக்னகார்கள் லக்னத்தில் சுக்கிரன் அமைந்து விட்டால் மனைவிக்கு அடங்கி போய்விடுவார்கள். 9-10 அதிபதிகள் இணைந்து இருப்பது தர்மகர்மாதிபதி யோகம் ஆகும்.மேஷத்தை பொறுத்தவரையில் இதன் முழு யோகத்தினை பெறுவது கடினம் தான், சனி மிகுந்த சுபத்துவம் பெறும் போது ஓரளவிற்கு இந்த யோகம் வேலை செய்யும். பாக்கியாதிபதி யான குரு பகவான் தன் இன்னொரு ஆதிபத்ய வீடான 12 ம் இடத்தோடு சம்மந்தம் கொள்ளாமல் இருப்பது சிறப்பான பலன்களை அளிக்கிறது.



புதன் 3 மற்றும் 6 க்குடைய லக்ன அசுபர் என்றாலும் சூரியன் உடன் சேரும் போது புத ஆதித்ய யோகம் பெற்று உயர்தர யோகத்தினை வழங்குவார். சூரியன் புத்தி பூர்வ புண்ணிய ஸ்தானாதிபதி என்பதால் அரசு பணிகளில் அமரும் பாக்கியம் உண்டாகும். மேலும் புத்தி கூர்மை, ஆழ்ந்த சிந்தனை, பல்துறை சார்ந்த விசயத்தில் ஆர்வம் இருக்கும்.ஜாதகர் எந்த விசயத்திலும் தந்திரசாலியாக செயல்படுவார்.

லக்னாதிபதி செவ்வாய் சந்திரன் வீட்டில் நீசம் பெறுவதால் தாயன்பு இவர்களுக்கு நிரந்தரமாக கிடைப்பதில்லை அல்லது தாயார் ஜாதகரை சரிவர புரிந்து கொள்ளாமல் நடப்பார்கள்.இவர்களுக்கு சர்ப்ப கிரகமான ராகு நன்மை அளிப்பதில்லை 12 ல் சனி யுடன் ராகுவும் தொடர்பு கொள்ளும் போது முழங்கால் மற்றும் பாதத்தில் குறைபாடுகள் வந்து விடும்.குருவின் பார்வை இருந்தால் பயம் இல்லை.

பெ ண் க ளை பொ று த் த வ ரை யி ல் வீ ட் டி ல் முடிவெடுப்பதில் தலையீடு இருக்கும்,குடும்பத்தில் ஆதிக்கம் செலுத்துவதில் ஆர்வம் கொண்டிருப்பார்கள்.தந்தையிடம் அதிகாரம் செலுத்துவதும் திருமணத்திற்கு பிறகு கணவன் மீது ஆளுமை செலுத்துவதுமாக இருப்பார்கள். சுப காரியங்களை முன் நின்று செய்வார்கள். செவ்வாய் லக்னத்தில் அமர்வது ஒரு வகையில் தோஷம் என்றாலும் வசீகரிக்கும் முகவாகு அமைகிறது.

மேஷ லக்ன ஆண் பெண் இருபாலருக்கும் சுக்கிரன் தசா சிறப்பாக இருப்பதில்லை! . இவர்கள் வேலையாட்கள், கூலி தொழிலாளர்கள், கீழ் நிலை பணியாளர்கள் இவர்களிடம் கவனமாக பழக வேண்டும் முடிந்தவரை அன்பாக நடந்து வருதல் நல்லது.

இ ந் த ல க் கி ன கா ர ர் க ள் மு ரு க வ ழி பா டு, சிவாலயங்களுக்கு சென்று சூரியனை வழிப்பட்டு வருவது போன்றவை மேன்மையான பலன்களை கொடுக்கும்.






இதுவரையில் மேஷ லக்ன காரர்களுக்கு கிரகங்கள் எவ்வாறு செயல்படுகிறது, அவர்களின் இயல்பான வாழ்வியல் என்ன என்பதை ஜாதக ரீதியாக அறிந்து கொண்டோம்.

அடுத்த இதழில் ரிசப லக்னம் குறித்த ஜோதிட தகவல்களை அறியலாம்.

திருநெல்வேலி மாவட்டம் வள்ளியூரை சேர்ந்தவர் ஜோதிடர் எல்லி. சட்டம் பயின்ற இவர் ஜோதிடம், தத்துவம், வரலாறு ஆகியவற்றில் நிபுணத்துவம் பெற்றவர். ஜோதிடம் தொடர்பான ஆய்வுகள், கட்டுரைகளை இணையத்தில் தொடர்ந்து எழுதும் டிஜிட்டல் ஜோதிட விற்பன்னர். தொடர்புக்கு : 9894176494



# விளம்பரங்கள் வரவேற்கப்படுகின்றன

நகரத்தார் வாசிப்பின் ஓர் அங்கமாக மாதந்தோறும்
நாம் நகரத்தார் மின்னிதழ் உலகளவில் வெளிவருகிறது.
பெரும்பான்மை நகரத்தார்களை சமூக இணையதள
ஊடகங்களின் வழி எளிதில் சென்றடையும்
நமது மின்னிதழில் உங்கள் நிறுவனம் மற்றும் தாங்கள்
சார்ந்த விளம்பரங்கள் இடம்பெற்றால் உலகளாவிய
நகரத்தார்களை எளிதில் சென்றடையும் .

நமது இதழில் விளம்பரம் செய்ய

ஒரு பக்க விளம்பரத்திற்கான
கட்டணம் ரூபாய் 350/= மட்டுமே

ஓர் ஆண்டிற்கு ( 12 இதழ்கள் ) விளம்பரத்திற்கான
கட்டணம் – ரூபாய் 4000/= மட்டுமே

குறைந்த செலவில் தங்களது விளம்பரங்களை
நமது மின்னிதழில் வெளியிட்டுப் பயன் பெறுங்கள்.

**மேலும் விபரங்களுக்கு**

9791776534
naamnagarathar@outlook.com

# நாம் நகரத்தார்

சமூக இணையதள மின்னிதழ்

நகரத்தார்களின் வாசிப்பின் ஓர் அங்கமாக
வணிகம், இலக்கியம், ஆன்மீகம், பண்பாடு, வாழ்வியல்
மற்றும் நிகழ்வுகள் ஆகிய தகவல்களை தாங்கி
தேர்ந்தெடுக்கப்பட்ட வாசிப்புகளின்
பெட்டகமாக ஓர் மின்னிதழ்.

மாதந்தோறும் இலவசமாக இணையவழி மற்றும்
உங்கள் கைபேசி வாயிலாக...

நாம் நகரத்தார் மின்னிதழை செலவின்றி உங்கள்
மொபைலில் வாசிக்க, உங்கள் விருப்பத்தை கீழ் உள்ள
எண்ணுக்கு வாட்ஸாப் மூலம் தெரியப்படுத்துங்கள்,

# 97917 76534

www.naamnagarathar.com